PUBLIC LIBRARY
JAFFNA

# அஞ்சலி

# ANJALI MAGAZINE

தீபம் - 04 சுடர் - 02 வைகாசி - ஆவணி - 2011



## உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை

# 'அஞ்சலி'

## உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை


**ஆசிரியர்:** அருட்தந்தை.சூ.டேமியன் அ.ம.தி M.A

**துணை ஆசிரியர்:** அருட்தந்தை.இ.செ.விஜேந்திரன் அ.ம.தி

**ஒருங்கிணைப்பாளர்:** கி.துளசிதாஸ் (B.Sc)

**நிர்வாகக் குழு:** அஞ்சலியக பணியாளர்கள் , அஞ்சலி இளையோர் சமூகம்

**ஆலோசனைக்குழு:**

அருட் தந்தை இ.ஸ்ரலின், M.Sc

அருட் தந்தை பிலிப் அ.ம.தி

மனநல மருத்துவர் எஸ்.சிவதாஸ், M.B.B.S

இ.து.குலசிங்கம்

ஜோசப் பாலா


## உள்ளே.....


| | | பக்கம் |
|---|---|---|
| ☺ | ஆசிரியரின் சிந்தனையிலிருந்து | 01 |
| ☺ | அத்திவாரம் ஆட்டம் கண்டால் | 02 |
| ☺ | அறிவியற் காரணங்கள் | 05 |
| ☺ | மகிழ்வூட்டி மகிழ்வடைதல் | 06 |
| ☺ | பூசைக்கேற்ற மலர் (சிறுகதை) | 09 |
| ☺ | உடற்சுகாதாரத்தைப்பேணி | 12 |
| ☺ | சிரிப்புடன் | 14 |
| ☺ | அமலமரித்தியாகிகளின் பணியில்.... | 15 |
| ☺ | ஸ்ரீ வரலக்ஷ்மி விரத மகிமை | 18 |
| ☺ | தற்கொலை | 21 |
| ☺ | வெள்ளிக்கிழமை பள்ளிக்கூடம் | 24 |
| ☺ | வறுமை ஒழிப்பு | 26 |
| ☺ | உன்னை விடு என்னைப் பார் | 29 |
| ☺ | முரண்பாடு பற்றிய பார்வை | 30 |
| ☺ | கம்பனின் கவித்திறன் | 32 |
| ☺ | இளமை இனிமை | 34 |
| ☺ | சுதந்திர தாகம் | 36 |
| ☺ | உழவரின் உழைப்பு உன்னதமானது | 38 |
| ☺ | அஞ்சலியக மாலை நேரக்கல்வி | 39 |
| ☺ | மாற்றியது நீயே (சிறுகதை) | 41 |
| ☺ | அறிவுத் துளிகள் | 45 |
| ☺ | ஒழுக்கமே உயிர் | 47 |
| ☺ | மாறிவரும் மானிடம் | 49 |
| ☺ | வன்முறை | 50 |
| ☺ | வாசகர் பார்வை | 52 |



**'ANJALI' Magazine,**
**Nellandai Road,**
**Thumpalai, Point Pedro,**
**Jaffna, Sri Lanka. Tel:**
**021 3217262**

விலை 35/=

**'அஞ்சலி' சஞ்சிகை,**
**நெல்லண்டை வீதி,**
**தும்பளை, பருத்தித்துறை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**
**தொ.பே: 021 3217262**

PUBLIC LIBRARY
JAFFNA

# ஆசிரியரின் சிந்தனையிலிருந்து....



## "உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உறவைப் பேணுவோம்"

உலக மயமாக்கலில் நுகர்வுக் கலாசாரச் சூழலில் இன்று எல்லோருக்குமே இயந்திரமான வாழ்க்கைமுறை. பயன்படுத்திவிட்டு தூக்கிப்போடும் கலாசாரம். பரபரப்புக்கு பஞ்சமில்லை. உறவுகளைப் பற்றியோ அடுத்தவரின் தேவையைப் பற்றியோ கவலை என்பது இல்லை. என் மனைவி, என் பிள்ளை, என் வேலை என் வீடு என்று இயந்திரமான வாழ்க்கை முறை; உறவுகளுக்கு முறையான வரவேற்பில்லை. உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் உறவுமுறை இல்லை. சுயநலத்திலும் சுயச் சாா்பிலும் மட்டுமே வாழ்க்கை என்னும் இயந்திரம் வடடமடித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய தேவையானது இந்தப் பரபரப்பான சூழ்நிலையைக் குறைத்து உறவுகளைப் புதுப்பித்து உணர்வுகளைப் புரிந்து கொள்ள நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறது.


கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் இல்லை. பரஸ்பரமான அன்பைப் பரிமாறிக் கொள்ள நேரமில்லை. பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் பிணைப்பில்லை. முதியோரை சுமையாகக் கருதி அவர்களை முதியோர் இல்லத்திற் குள் அடக்கம் செய்யும் கல்லறை மனிதர்கள் இந்த சமுதாயத்தில் உண்டு. உறவுகள் அறுந்து கிடக்கின்றன. பணம், பதவி, பட்டம், சமூக அந்தஸ்து என அலை பாயும் மனிதர்கள். இங்கே உறவுகளுக்கும் மதிப்பில்லை. உணர்வுகளுக்கும் மதிப்பில்லை.

அடுத்தவரைப் புரிந்து கொள்ளாமல் ஒரே பரபரப்பில் இயங்குகின்றோம். குடும்பத்தில், ஊரில், தெருவில் உள்ள சகமனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதில்லை. அழுவோருக்கு ஆறுதலும் துன்புறுவோருக்கு உதவிக்கரமும் நாம் நீட்டுவதில்லை. ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஒரு சோகம் ஒளிந்திருக்கிறது. ஒவ்வொரு வரும் ஏதோ ஒரு வகையில் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆகையால் உறவை வளர்க்க ஒருவரையொருவர் மனம்திறந்து பாராட்டுங்கள். முடிந்தால் பரிசுப் பொருட்களைக் கொடுத்து பரஸ்பரம் பாராட்டிக் கொள்ளுங்கள். உரையாடும் போது ஒருமையில் உரையாடாமல் மரியாதையுடன் பேசப் பழகுங்கள். மனத்தைக் கொண்டிருப்பதாலேயே நாம் மனிதன் என்று அழைக்கப்படுகின்றோம். மனம் புனிதமானது. அது உணர்வுகளின் கருவூலம். உறவுகளின் கருவறை. எனவே மனப்பாரத்தோடு இருக்கிறவர்களுக்கு ஆறுதல் கொடுத்து மகிழ்ந்திருக்க உதவுங்கள். புன்னகை பூத்து எப்பொழுதும் மகிழ்ச்சியோடு செயல்படுங்கள்.

-அருட்தந்தை. S. டேமியன்-

# அத்திவாரம் ஆட்டம் கண்டால்..........



மனித வாழ்வியலில் எந்தக் கூறும் அதனுடைய அடிப்படை அமைப்பைக் கொண்டே தன்னுள் பிரவாக மாகின்றது. பாறை மீது கட்டிய வீடே புயல் மழையில் சிக்குண்டபோதும் தளராத உறுதியுடன் நிலைத்து நிற்கும் என கூறும் விவிலிய வாத்தைகளும் இதையே மெய்ப்பித்து நிற்கின்றன. எனவேதான் எம்முடைய அனைத்து விடயப் பரப்புக்களிலும் ஆரம்பம் தொடர்பாக அதிக கவனம் செலுத்துகின்றோம்.

இதனை எமது வாழ்வியலில் முக்கிய நிகழ்வாகிய குழந்தையின் பிறப்புத் தொடர்பான விடயத்தில் செயற்படுத்தினாலும் அதனுடைய முழுமைத் தன்மை என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில் மனித விருத்திப் படிநிலையில் பலகால கட்டங்கள் காணப்படினும்,

1) Pre-natal period - பிரசவத்திற்கு முன்னான பருவம்

2) Infancy - சிசு குழந்தைப்பருவம் போன்ற படிநிலைகளில் நாம் காட்டுகின்ற, நாம் இடுகின்ற அடித்தளமே ஏனைய விருத்திப்படி நிலைகளின் வளர்ச்சி விருத்தியில் செல்வாக்கு செலுத்தப்படுவதாக நம்பப்படுகின்றது. இன்றைய யதார்த்தம் உலகமயமாதலை முன்னிலைப்படுத்தி தொழில் நுட்ப விஞ்ஞானத்தில் முன்னேற்றத்தை அதி விரைவுபடுத்தியிருக்கின்ற அதே வேளை, அடிமட்டத்தில் அடிப்படை தேவைகளைக்கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத துர்ப்பாக்கியத்தையும் ஏற்படுத்த தவறவில்லை.

1965 களில் கத்தோலிக்க திருச்சபையின் முக்கிய வெளியீடான இன்றைய உலகில் திருச்சபை என்னும் கொள்கை திரட்டில் சமூக படிப்பினைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றது. அதில் சமூகத்தின் முக்கிய கூறாகிய மனிதனுடைய இன்றைய நிலைமை தொடர்பான தீர்க்க தரிசனம் அன்றே கூறப்பட்டிருக்கின்றது. அதாவது மனிதனுடைய இன்றைய நிலைமைக்கு காரணம் அவன் தன்னுள்ளே பிளவுபட்டிருத்தலும் அதனால் ஏற்படுத்திக் கொண்டுள்ள முரண்பாட்டு நிலைகளும் ஆகும்.

உதாரணமாக :- ஒரு துறையின் சிறப்புத்தேர்ச்சி → பல்துறை ஆர்வம்

ஆன்மீக ஈடுபாடு → உலகியலில் நாட்டம்

பிறருடன் நட்புறவு → அடுத்திருப்பவருடன் கொடிய பகை

அந்த வகையில் இன்றைய யதார்த்தம் உளவியலுக்கான தேவையை அதிகப்படுத்தி மனித மனங்களை பக்குவப்படுத்தி வழிப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளுகின்றபோதும் அது முழுமையான பலனைத் தருவதாக இல்லை. மேலும் ஒரு குறிப்பிட்ட வரையறைகளுக்கப்பால் மனித மனங்களை மேற்கொள்ள முடியாத நிலையும் காணப்படுகின்றது. இந்நிலைகளை சரி செய்ய வேண்டுமாயின் மனித விருத்திப்படிநிலையின் மேற்கூறிய ஆரம்ப படிநிலைகளில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மருத்துவத்துறையிலும், உளவியல் துறையிலும் ஏற்பட்டுள்ள இன்றைய வளர்ச்சிப் போக்கானது பிறப்பிற்கு முன்னான விருத்திப்படி நிலைகள் தொடர்பாக தெளிவு நிலையை எமக்கு தருகின்றது.

1) **Pre-natal period** - பிரசவத்திற்கு முன்னைய நிலை சூலும் (ovum) விந்தும் (sperm) சேர்ந்து உருவாகும் கருவாகிய நுகம் (fertilized egg) பொதுவாக 286 நாட்களில் சிசுவாக வெளிவரும் வரையில் கருத்தரித்த தாயின் மனநிலை, உடல்நிலை, சூழல் தொடர்பான காரணிகள் அந்த சிசுவை பாதிப்பதை மருத்துவம் , உளவியல் ரீதியான ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

உதாரணமாக:

i) தாயின் உடலியல் நோய்கள் பிள்ளைக்கு ஏற்படல்

ii) தாயின் உளநிலைகள் (பயம் போன்றன) பிள்ளையில் காணப்படல்

எனவே கருத்தரிக்க ஒரு தாய் முழுமையான தயார்படுத்தலை தன்னுள் செய்வதுடன் முழுமையான மருத்துவ ஆலோசனைக்கூடாக சிசுவை பெற்றெடுப்பது பிள்ளையின் எதிர்கால நன்னிலைமையை வளப்படுத்தும். ஏனெனில் போதிய உடல் , உள தயார்படுத்தல் இல்லாத நிலையில் கருத்தாங்கி முறையாக பிரசவிக்க முடியாத நிலையிலும், அவ்வாறிருந்தும் தமது ஒரு சில தேவைப்பாடுகளை முன்னிலைப்படுத்தி சிசேரியன் முறையில் பிரசவிக்கப்படுகின்ற பிள்ளை வலிந்து உலகிற்கு இழுத்துவரப்படுகின்றது என்ற யதார்த்தத்தை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே பிரசவத்திற்கு முன்னான நிலை என்பது பிள்ளை தாயின் வயிற்றினுள் இருப்பதால் சமூகத்தின் ஏதுக்கள் அதனை பாதிக்காதென்ற சிந்தனை மாற்றியமைக்கப்பட வேண்டியதொன்றாகும்.

## 2) Infancy - சிசு / குழந்தைப்பருவம்

இப்பருவமானது குழந்தையின் பிறப்புத் தொடக்கம் 2 வயது வரையான பருவத்தினைப் பொதுவாகக் கொள்பவர். (Birth-2years) இப்பருவத்தில் கால், கையை அசைத்தல், உடம்பை புரட்டித் தவழுதல், தலையை தூக்கிப் பார்த்தல், இருத்தல், எழுந்து நிற்றல், நடத்தல், அழுதல் போன்ற உடலியல் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளுகின்ற அதே வேளை நாம் செய்தவற்றை அப்படியே செய்ய முயற்சி எடுக்கின்ற நிலையையும் அவதானிக்கலாம்.

நாம் கதைத்தால் அதேபோல கதைக்க எத்தனிப்பதும் நாம் சிரித்தால் தாமும் சிரிப்பதும் நாம் வன்போக்கைக் காட்டினால் தாமும் அதே போல துலங்குவதுமாக போலச்செய்தல் பாங்கில் வாழ முற்படுவர்.

இதை உற்றுநோக்க தவறுகின்ற பெற்றோர், சுற்றத்தோர் பிள்ளையை ஒரு பொருட்டாகக்கருதாது தமது வழமையான வாழ்க்கைக் கோலத்தை அவர்கள் முன்னிலையில் காண்பித்து விட்டு அதைப் பிள்ளை தொடருகின்றபோது குறிப்பாக மற்றவர்கள் முன்னிலையில் நிகழ்த்தும் போது பிள்ளையைத் தண்டிக்க முயலுகின்றனர்.

உதாரணமாக:- இப்பருவத்தில் பெரியவர்களை பெயர்சொல்லி அழைக்கப்படுகின்ற பெற்றோர் அதே காரணத்திற்காக பிள்ளையை தண்டிப்பதுண்டு.

மேலும் Sigmund freud கோட்பாட்டின்படி வாய்வழி இன்பத்தை அனுபவிக்கின்ற இப்பருவத்தில் தாய்ப்பால் ஊட்டப்படுவது இன்றியமையாதது. மேலும் அதைத் தகுந்த உடல், உள ஆயத்தத்துடன் தாய் கொடுப்பதும் முக்கியமானது. அத்துடன் எடுக்கின்ற பொருட்களை யெல்லாம் வாய்க்குள் வைப்பதை அதட்டி தண்டித்து நிறுத்த முயல்வது பிள்ளையின் உள நிலையில் பல மாறா வடுக்களை ஏற்படுத்தலாம்.

எனவே ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழிக்கிணங்க மேற்கூறிய இரண்டு பருவநிலைகளிலும் போதிய கவனிப்பைச் செலுத்த தவறிய பெற்றோர் குறிப்பாக பள்ளிப் பருவத்தில் மற்றப் பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பேசுவதும் பிள்ளையை மாற்ற வேண்டிய பொறுப்பை பாடசாலைகளிலும் எதிர்ப்பார்ப்பதும் வெறும் கானல்நீரே.

**Mr.S.I.Gilani,**
**B.A(Hons), PGDE (Distinction)**

# அறிவியற் காரணங்கள்




❖ மூளையைச் செலவு செய்தால் ஆயுள் குறையுமா?

நிச்சயம் குறையாது. வயது முதிர்ந்த சிறந்த சிந்தனையாளர்களின் மூளையில் கூட இன்னும் பயன்படுத்தாத பகுதிகள் ஏராளம் இருப்பதாக அறிவியல் கூறுகிறது.

❖ கோபம் வரும் போது நரம்புகள் துடிப்பது ஏன்?

கோபம் வரும் போது கைகள் நடுங்கும். தசைநார்கள் துடிக்குமே தவிர நரம்புகள் துடிப்பதில்லை. அட்ரீனலின் சுரப்பதே இதற்குக் காரணம்.

❖ மண் பானையில் நீர் எவ்வாறு குளிர்கிறது?

மண் பானையில் ஏராளமான நுண்துளைகள் உள்ளன. பானையில் உள்ள நீர் இந்த நுண் துளைகளின் வழியாக கசிந்து வெளியேறி ஆவியாகின்றது. இவ்வாறு தொடர்ந்து நீர்த்துளிகள் ஆவியாவதால் பானையில் நீரின் வெப்பம் குறைந்து குளிர்கின்றது.

❖ உருளைக்கிழங்கை வேக வைக்கும் போது அதனுடன் உப்புச் சேர்த்தால் சீக்கிரம் வெந்து விடுவது ஏன்?


நீரின் கொதிநிலை 100° செல்சியஸ் நீரில் உப்பைச் சேர்ப்பதால் நீரின் கொதிநிலை 100° விட அதிகமாகின்றது. அதனால் உருளைக்கிழங்கு சீக்கிரம் வெந்து விடுகின்றது.

❖ காய்களை மூடி வைப்பதால் பழுப்பது ஏன்?

காய்களில் சுரக்கும் எத்தலீன் எனும் ஓமோன் செயலால் காய்கள் பழுக்கின்றன. பழமாகும் முன் பறித்த காய்களைக் கூடையில் மூடி வைப்பதால் ஒரு காயில் வெளியான எத்தலீன் ஓமோன் காற்றில் கரைந்து மற்ற காய்களையும் பழுக்கச் செய்கின்றது.

**த. கார்த்திகா,**
**தரம் -11,**
யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்

# மகிழ்வூட்டி மகிழ்வடைதல்



"மகிழ்வுடன் வாழ" யாருக்கு விருப்பமில்லை. அதனை அடைவதற்கான தேடல், உழைப்பாக, தொழிலாக, பொருள் பண்டங்களாக, நிவாரணமாக தேடியும் அந்த "மகிழ்வுடன்" என்ற பதத்தை அனுபவிக்க முடியுமா? அதனை அறிய அனுபவிக்க செயல்பட முன்வருவோம்.

வறுமையில் வாடுபவர் மட்டுமல்ல பல வசதிகளுடன் வாழ்பவர்களும் இந்த மகிழ்வைக் காணமுடியாது அலைகின்றார்கள். உடை அழகை, உடலழகை கண்ணாடியில் அல்லது பிறர் கூறி, அல்லது புகைப்படம் எடுத்துக் கண்டு கொள்ளலாம். உள்ளத்தை அதில் உள்ள சுமைகளை அளக்க எந்தக் கருவியும் இதுவரை உலகில் கண்டு பிடிக்கவில்லை.

"மகிழ்வுடன் வாழ வேண்டும் என்பதில் உள்ள ஆர்வத்தை பிறர் மகிழ்வில் காண உழைக்கும் போது உன் உள்ளம் பெறும் ஆனந்த மகிழ்வுக்கு நிகர் ஏதுமில்லை" என்பார் பாலயோகி.

நிவாரணங்களோ, பணங்களோ, பதவிகளோ மகிழ்வை கொடுக்காது என்பதால் உங்கள் தேடல், உங்கள் முயற்சி எங்கும் ஒன்றுகூடும்போது சற்று ஆழமாக சிந்தியுங்கள்

எமது மகிழ்விற்கு நிவாரணம் தேடுவதை விட பிறர் மகிழ்வுக்காக நாம் நிவாரணம் அளிப்போமா? எம்மிடம் ஏதுமில்லையே என கலங்க வேண்டாம். உணர்ந்தால் முடியும், உள்ளத்தால் உணர்வுபடுத்தலால், உடனிருத்தலால் பிறரின் உள மகிழ்வுக்கு நிவாரணம் கொடுக்கும் மனிதர்களாக மாறும் ஒவ்வொருவராலும், மற்றவர் மகிழ்வடைவார். அந்த நம்பிக்கையை ஊட்டுவதே நல்ல ஆளுமையுள்ளோரின் பணிகளாகட்டும். இவற்றால் கிட்டும் மகிழ்வுக்கு ஈடேது.

- பிறர் குறைகளை அல்ல நிறைகளை ஊக்கப்படுத்துவோம்.

- கவலைகளைப் பகிர சந்தர்ப்பம் அளிப்போம், செவி மடுப்போம், மனக்காயங்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளிப்போம்.
- பிறர் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் ஒவ்வொரு கணமும் புதிய உறவுகள் நம்பிக்கையில் வாழும். மகிழ்வு இரட்டிப்பாக மாறும்.
- இதுவரை தடை தாண்டிய அனுபவங்களை பாராட்டி, ஊக்கப்படுத்தி நம்பிக்கை வாழ்வை சுவைக்க, நினைவுகளை மீட்க ஊக்கப்படுத்துவோம்.
- உறவாடல் , உரையாடலில் மிகவும் நிதானமாக மன உணர்வுகளுக்கு மதிப்பளிப்போம்.
- புன்னகை பூக்கும் சந்திப்புக்களால் பிறர் மகிழ்வில் நாம் மகிழ்வோம்.

பிறரை மகிழ்விப்பதற்காகவே விருந்தோம்பல், தரிசிப்புக்கள், பரிசளிப்புக்கள் முன்னோர் ஏற்படுத்தியதன் தொடர் இன்றும் நடைபெறும் நிகழ்வுகளானது. அவை அர்த்தம் தொலைந்தவையாக, ஏதோ கடமையாகி கடனாக செய்யும் செயல்களால் அர்த்தமிழக்கிறது.

விருந்தோம்பல் தாமாக தயார் செய்து விருந்தினரை வரவேற்று அவர்களோடு உறவாடி, உரையாடி அவர்கள் விருப்பத்திற்கேற்றதை பகிர்ந்துண்பதெல்லாம் மாறி தமது உணவு விடுதிக்காரர் தீர்மானிக்க கடமைகளுக்காக யாரோ சமையல் செய்யவும், யாரோ பரிமாறவும், யாரோ திட்டமிடவும் யந்திர உபசரிப்பாகி Video பதிவுகளில் உறவை தரிசிக்கும் நிலையில் உணர்வு பூர்வமான, உறவுபூர்வமான பகிர்தல் இன்றியமையாததாகி விடுகிறது.

பரிசுகள், பாராட்டுக்கள், இறக்குமதிப் பொருட்களின் பண்டமாற்று நிகழ்வாக கடன் தீர்த்தலாக கைமாறி வருவதும் மகிழ்வுக்கு அர்த்தமிழந்து போக காரணமாகிறது.

அன்பின் பகிர்வுகள், மகிழ்வின் சிறப்புக்கள். எந்த வறுமையிலும் உபசரிக்கும் உரையாடல், உறவாடல், உடல்மொழிகளிலும் வார்த்தை வடிவங்களிலும் எதையும் எதிர்பாரா உள்ளன்பு பண்புகள் வெளிப்படுத்தலில் பொருளின் பெறுமதி, உணவின் உயர்நிலை

கணிப்பிடப்படுவதில்லை. ஓலை குடிலிலும் பரிமாறும் ஒரு மிடறு தேநீர் பரிமாற்றம் கூட அமிர்தமாக மாறும் மகிழ்ச்சியின் அடையாளமாக வெளிப்படும். இதுவே மகிழ்வுக்கு பெறுமதி சேர்க்கும்.

எம்மிடம் ஒன்றும் இல்லையே என்பதை விட எம்மால் பிறருக்கு நிவாரணம் அளிக்க முடியும் என்பதனை மேற்கூறிய வழிகளில் நம்பிக்கையில் மலரும் புதிய நாட்களை எதிர்கொள்ள எம்மை தயார்படுத்துவோம்.

கிடைக்கும் பயிற்சிகள், நல் நூல்கள், அறிவூட்டல்கள் எம்மைப் புதுப்பித்து பிறர் மகிழ்வுக்கு எம்மை தயார் நிலையில் இருக்கும் வளங்களை பயன்படுத்துவோம். உங்கள் அன்புறவாடல் யாரை மகிழ்வித்தது என்பது தான் உங்கள் வாழ்வினில் கிடைத்த விடையாகட்டும்.

**-J.ஜோசப்பாலா-**

## சிந்திக்க வைத்த விடயங்கள்

- பணம் சேர்ப்பது மட்டும் வாழ்க்கை அல்ல. நல்ல மனங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- நல்லவற்றைப் பாறையில் எழுது. தீயவற்றைப் பனிக்கட்டியில் எழுதுக.
- ஒருமனிதனைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் அவனிடம் அதிகாரத்தைக் கொடு.
- செய்வதை திருந்தச்செய்வதே வெற்றிக்கு வழி.
- மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் பேசுவானானால் உலகில் அமைதி நிலவும்.
- நம்பிக்கையே இனிமையான எதிர்காலத்தை அமைக்கிறது.

**வி.நிதுஷன்**
தரம் 8
அஞ்சலியகம்

# பூசைக்கேற்ற மலர்

## (சிறுகதை)

வாணி பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள். பண்டிதர் முருகேசுவின் மகள் வாணி பெயருக்கேற்ப மிகவும் கெட்டிக்காரி. ஜீ.சீ.ஈ.ஓ.எல் பரீட்சையில் ஒன்பது A யும் ஒரு B யும் பெற்று ஏ.எல் வகுப்பில் படித்துக்கொண்டு இருக்கின்றாள்.

வாணியின் வரவுக்காகக் காத்திருந்தான் கணேஸ். அவனும் மிகவும் திறமைசாலி. ஓ.எல். பரீட்சையில் பத்து A களைப் பெற்று ஏ.எல் படித்துக் கொண்டிருப்பவன். கணேசின் தகப்பன் மயிலர். பண்டிதர் முருகேசு வீட்டுக் குடிமைக்கட்டாடியார்.

கணேஸ் வாணியைக் கண்டதும் "வாணி இந்தாங்கோ உங்கடை புத்தகம்" என்று கூறி அவளிடம் முதல் நாள் தான் வாங்கிய புத்தகத்தைக் கொடுத்தான்.

"படிச்சிட்டீங்களே கணேஸ்?" என்று கேட்டவள் கணேசிடமிருந்து புத்தகத்தை வாங்கிக்கொண்டாள். "ஓம் நான் படிச்சிட்டன் எனக்கொரு உதவி செய்யவேணும் வாணி" என்று கேட்ட கணேஸ் வாணியை உற்று நோக்கிப்பார்த்தான்.

"என்ன உதவி கணேஸ்?" என்றாள் வாணி "நான் காலையிலை உயிரியல் ரியூசனுக்கு வரஇல்லை. அந்த நோட்சை ஒருக்கால் தந்தீங்கள் எண்டால் ஒரு... ஆறுமணிபோலை வீட்டிலை கொண்டு வந்து தாறன்" என்று கூறினான் கணேஸ். "நான் அதைக் கொண்டுவர இல்லை. நீங்கள் பின்னேரம் வீட்டுக்கு வாங்கோவன் தாறன்" என்றவள் நடக்கத் தொடங்கினாள்.

இதைக் கவனித்துக் கொண்டுநின்ற கணேஸின் நண்பர்கள் "டே கணேஸ்... ஒருமாதிரி வாணியை மடக்கிப்போட்டாய் சரி, சரி நல்ல புளியங்கொம்புதான் விடாதை மச்சான்" என்று கிண்டல் செய்தனர். கணேஸின் முகம் மெல்ல கருமுகில் சூழ்ந்தது.

"தயவு செய்து கிண்டல் செய்யாதை. வாணி எனக்குத் தங்கச்சிபோலை. நான் ஆரோ, அவவும் ஆரோ. தயவு செய்து இனிப்பகிடி பண்ணாதேயுங்கோ" என்றான் கணேஸ்

"ஓம்.... ஓம் எங்களுக்கெல்லாம் விளங்கும்" என்றார்கள். "உங்களைத் திருத்தவே ஏலாது நான் வாறன்" என்ற கணேஸ் சைக்கிளில் ஏறி ஊன்றி மிதித்தான்.

சார்மனைக் கதிரையில் சாய்ந்தபடி ஏதோஒரு புத்தகத்தில் மூழ்கி இருந்தார் பண்டிதர் முருகேசு. மிகவும் நல்ல மனிதர். அவர் படிப்பதற்கு என்றால் யாருக்கும் முன்னின்று உதவுவார். அவரைத்தேடி எந்த நேரத்தில் எவர் போனாலும் தமிழ், ஆங்கில மொழிகளை ஆர்வத்தோடு கற்பித்து மாணவருக்கு ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் தெளிவுற விளக்கி வைப்பார். வெள்ளாளராக இருந்தாலும் எல்லாருடனும் சமமாகப் பழகும் மனப் பக்குவம் கொண்டவர். படிப்புக்கு ஏற்ற பண்பு நிறைந்தவர் பண்டிதர் முருகேசு.

கணேசுவின் தந்தை மயிலர். பண்டிதர் வீட்டிற்கு வெளுத்த உடுப்புக்களைக் கொண்டு வரும்போதெல்லாம் கணேஸின் படிப்பைப் பற்றி பண்டிதர் கேட்டுக்கொள்ளத் தவறியதுகிடையாது.

படலைச் சத்தம்கேட்டு சற்றுத்தலையை நிமிர்ந்து பார்த்தார் பண்டிதர். ஊர்க்குருவி உலகநாதன் செட்டை இல்லாமலே பறந்து வந்து கொண்டிருந்தார். "உலகநாதன்" என்று பெயரைச் சொல்வதைவிட "ஊர்க்குருவி" என்றால் தான் அந்தக் கிராம மக்களுக்கு மட்டும் அல்ல அயல் கிராமங்களுக்கும் தெரியும்.

ஓர் அற்ப நிகழ்ச்சியைக் கூட நல்லாய்ச் சோடிச்சு சப்பறம் கட்டுவதில் "ஊர்க்குருவி" பரம்பரையினர் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்கள்.

"என்னவோ தொழவாரம் காவிக்கொண்டு வாறான். இனி என்ரை வாசிப்பை ஏடு கட்டிப்போட்டு உவனுக்கு ஒத்தூதநேரம் சரி. இவனும் எங்களுக்கு உறவுக்காரன் எண்டு வந்து சேர்ந்தான்" என்று தன் மனதுக்குள் அலுத்துக்கொண்ட பண்டிதர் புத்தகத்திலிருந்து கண்களை எடுக்காமல் இருந்தார்.

என்ன? மச்சான் படிக்கிறியள் போலகிடக்குது. தங்கச்சியையும் காணன். நான் உங்களைக் குழப்ப இல்லை. ஒரு கதைகேள்விப்பட்டனான் உங்கடை காதிலை போட்டு வைக்கவேணும் எண்டுதான் வந்தனான் என்று தான் பாடப்போகும் வில்லுப் பாட்டிற்கு மெட்டுக் கட்டினார் ஊர்க்குருவி.

தலையை நிமிர்த்தி உலகநாதனைப் பார்த்தார் பண்டிதர். "என்னடாப்பா, என்ன விசயம்? உனக்கு ஊர்க்கதை எண்டால் காவத் தொடங்கிவிடுவாய்.... சரி சொல்லு."

ஊர்க்கதைக்கு இந்தப் படுபொழுதுக்கை அவசரமாய்வாறனே? எல்லாம் உங்கள் கதைதான் என்ரை மூத்தவன் தாயோடை பறஞ்சதைக் கேட்டுவிட்டு உங்களிட்டைவாறன்.

"என்னெண்டால்..." என்று இழுத்தபடி சுற்றும் முற்றும் ஒரு தரம் தலையைத் திருப்பிப் பார்த்துவிட்டு பின் தனது குரலைத் தாழ்த்தி "உவள்பிள்ளை வாணியையும், எங்கடை கட்டாடி மயிலரின்ரை பொடியனையும் பற்றி பள்ளிக்கூடத்திலை அப்படி இப்படிக் கதை அடிபடுகிதாம். பேந்து பிறகு எங்கடை குலத்துக்கு ஈனம் வாறமாதிரி ஏதும் நடந்தால் மானக்கேடு மச்சான்." என்றவர் பண்டிதரின் முகத்தைப் பார்த்தார்.

பண்டிதர் இப்பவும் புத்தகத்தில் தான் கண்ணாய் இருந்தார். ஊர்க்குருவி விடுவதாயில்லை. "இப்ப எல்லாரும் எங்கடையாளுக்கை பொம்பிளை எடுத்து வெள்ளாளர் ஆகப் பார்க்கிறாங்கள். தன்ரை பொடியன் பத்துப்பாடமும் பாசு பண்ணிப்போட்டான் எண்டு உங்கினை ஆரும் கதைச்சஉடனே மயிலருக்கும் தலை கால் தெரியேல்லை. இதை ஒருக்கால் கவனத்திலை எடுங்கோ நான் வாறன்." என்ற ஊர்க்குருவி தன் துவாய்த் துண்டை உதறித் தோளில் போட்டபடி படலையை நோக்கி நடந்தார்.


புத்தகத்தை அப்படியே நெஞ்சில் கவிழ்த்து சார்மனைக்கட்டிலில் நன்றாகச் சாய்ந்து கண்ணை மூடிக் கொண்டார். பண்டிதர் அவரின் நினைவுகள் கடந்த காலத்தை நோக்கியது. மயிலர் நல்ல மனிதர், பண்டிதர் கஸ்டப்பட்ட காலத்திலை எல்லாம் கூலியை எதிர்பாராமல் துணி, மணிகளை வெளுத்துக் கொடுத்தவர். எத்தனை நாள் வாணியைத் தூக்கிக் கொண்டு போய் பள்ளிக்கூடத்திலை விட்டிருப்பார். அப்படி தப்பாய் ஏதும் நடக்க மாட்டாது என்ற நம்பிக்கை பண்டிதருக்கு நிறையவே இருந்தது. இருந்தாலும் ஏதோ ஒரு சலனம் அவரின் நம்பிக்கை என்னும் ஒளிக்குத் திரையிட்டு நின்றது.

(தொடரும்.......)

**இ. சச்சிதானந்தம்**
பருத்தித்துறை.

# உடற்சுகாதாரத்தைப் பேணி ஆரோக்கியமாக வாழ்வோம்.

நோய் வந்த பின்னர் வருந்துவதிலும் வருமுன் காப்பதே மிகச்சிறந்தது. எனவே சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களை சிறுவயது முதல் கற்றுக்கொள்வது அவசியமானது.



தற்சுகாதாரம் என்பது ஒருமனிதன் தனது பூரண உடல் நலத்திற்காக தானாகவே தினமும்செய்யக்கூடிய சுகாதாரப் பழக்க வழக்கங்களை உள்ளடக்கியதாகும்.

**தோலினை கழுவுதல்.**

⇒ தோலினை தினமும் சவர்க்காரம் , நீர் கொண்டு நன்கு கழுவுவதற்கு, தினமும் குளிப்பதனை வழக்கமாக வைத்திருத்தல் வேண்டும்.

⇒ குளிக்கும் போது அக்குள், காதின் பின்புறம், கால்களின் இடைப்புறம், விரல்களின் இடைப்புறம் என்பவற்றில் விசேட கவனம் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

⇒ தமக்கென்று தனித்தனியான துவாய், சவர்க்காரம் என்பவற்றைப் பேணுதல் வேண்டும்.

**கைகளைக் கழுவுதலும் சுத்தமாகப் பேணுதலும்**

⇒ ஒருவர் சாப்பிட முன்பும், சாப்பிட்ட பின்பும், மலம் கழித்த பின்னரும், சமைப்பதற்கு முன்பும், மண் வேலைகளில் ஈடுபட்ட பின்பும், சில விசேட சந்தர்ப்பங்களிலும் கைகளை நன்கு கழுவுதல் அவசியமாகும்.

⇒ கைகழுவுகின்ற போது விரல்களுக்கு இடைப்புறம், மணிக்கட்டு, நகம் என்பவற்றை நன்கு சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும்.

⇒ தோலில் சிராய்வு, வெட்டுக்காயங்கள் ஏற்படின் அவை சுத்தமாக கழுவப்பட்டு மூடப்படல் வேண்டும்.

⇒ கை-கால் நகங்கள் வெட்டப்பட்டு சுத்தமாக பேணப்படல் வேண்டும், ஆனால் சதையுடன் சேர்த்து வெட்டக்கூடாது.

⇒ நகம் கடிக்கும் பழக்கம் தீயவிளைவுகளை ஏற்படுத்தும், எனவே தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

**பற்சுகாதாரத்தைப் பேணுதல்**

⇒ இனிப்பான , ஒட்டும் தன்மையுள்ள உணவுகளுக்குப் பதிலாக பழவகைகளை உண்ணுதல் நன்மை தரும்.

⇒ இனிப்பான உணவுகளை பிரதான உணவு வேளையின் பின்னர் மாத்திரம் சாப்பிட்டு வாயினை நன்கு கழுவுதல் வேண்டும்.

⇒ வாயு அடைக்கப்பட்ட மென்பானங்கள், இனிப்பான பானங்கள் அருந்துவதனைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும்.

⇒ 6 மாதங்களிற்கு ஒரு தடவையேனும் பல் வைத்தியரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளுதல் நன்மை தரும்.

⇒ தினமும் காலையும், சாப்பிட்ட பின்னரும், இரவு நித்திரைக்கு செல்ல முன்னரும் பல்துலக்குதல் வேண்டும்.

**சரியான பல்துலக்கும் முறை**

⇒ முதலில் உங்களிற்கு ஏற்ற சரியான பற்தூரிகை தெரிவு (நடுத்தர அடர்த்தியான தூரிகை கொண்ட வளைந்து கொடுக்கக்கூடிய பிடியுள்ள பற்தூரிகை)

⇒ போதியளவு புளோரைட் அடங்கிய பற்பசையை பயன்படுத்தல் வேண்டும்.

⇒ மேல்வரிசைப்பல்லினை மேலிருந்து கீழாக உட்புறமும், வெளிப்புறமும் துலக்கப்படல் வேண்டும்.

⇒ அதேபோன்று கீழ்வரிசைப்பல்லினை கீழிருந்து மேலாக உட்புறமும், வெளிப்புறமும் துலக்கப்படல் வேண்டும்.

⇒ பற்களும், முரசும் சந்திக்கும் இடத்தில் குறைந்த விசையுடன் துலக்க வேண்டும்.

⇒ பற்களால் மேற்பரப்பு சமாந்தரமாக தேய்த்து கழுவப்படல் வேண்டும்.

⇒ பல்துலக்கும் போது நாக்கும் சுத்தமாக்கப்படல் வேண்டும்.

**V.கஜேந்தினி**
மருத்துவபீட மாணவி

# சிரிப்படன்.....



என்ன்டா செய்யறே அங்கே?
தம்பிக்கு லெட்டர் எழுதறேன்!
உனக்குத்தான் எழுதத் தெரியாதே!
தம்பிக்குத்தான் படிக்கத் தெரியாதே!

தாயே மகாலட்சுமி! கண் தெரியாத குருடன் சோறு இருந்தா போடும்மா?
இவன் சொன்னதைக் கேட்டீங்களா? இவன் குருடன் இல்லைன்னு நினைக்கிறேன்.
நிச்சயமா குருடன்தான்.
எதனால் அப்படிச் சொல்றீங்க?
உன்னைப் பார்த்து மகாலட்சுமின்னு சொல்றானே!

இந்த திரவத்திலே ஒரு ரூபாய் நாணயத்தைப் போடப் போறேன். இது கரையுமா, கரையாதா என்று விஞ்ஞான ஆசிரியர் கேட்டார்.
கரையாது என்றான் ஒரு மாணவன்.
எதனால் அவ்வளவு நிச்சயமாய் சொல்கிறாய்?
கரையுமென்றால் நீங்கள் போட மாட்டீர்களே!

முட்டையிலிருந்து கோழிக் குஞ்சு வெளிவருகிறதே, இயற்கையில் இதைவிடப் பெரிய அதிசயம் என்ன இருக்க முடியும்?
முதலில் குஞ்சு முட்டைக்குள் போய் பதுங்கிக் கொள்கிறதே! அது இதைவிட ஆச்சரியம் இல்லையா?

அம்மா! பள்ளிக்கூடத்தில் நடக்கப் போற ஓட்டப் பந்தயத்தில் கலந்துக்கப் போறேன்.
பார்த்து ஓடடாப்பா, வேகமா ஓடிக் காலை ஒடிச்சுக்கப் போறே.

**நன்றி.**

**கவலையை மறந்து சிரியுங்கள்**

# அமலமரித்தியாகிகளின் பணியில் இலங்கைத் திருச்சபை.....

ஈழத்து மறைத்தொண்டன் அருட்திரு ஜோசப் வாஸ் அடிகளின் பணியின் பின்னர், இலங்கைக் கத்தோலிக்க மக்கள் தொண்டர்கள் வருவார்கள் என்ற ஏக்கத்துடன் மேல்நாட்டை நோக்கிக் கொண்டிருந்த வேளையில்தான் அன்றைய யாழ் ஆயர் பெற்றக்கினியின் வேண்டுகோளுக் கிணங்க, எளியோர்க்கு நற்செய்தி நவில்வதே எம் சபையின் உயரிய இலக்கு எனக்கூறி அமதிகளின் ஸ்தாபகர் **1847**ஆம் ஆண்டு மனமகிழ்வோடு பணியாளர்களை இலங்கைத் திருநாட்டிற்கு அனுப்பி வைத்தார்.

காலியில் காலூன்றிய அமலமரித்தியாகிகள் தம் பணித்தளமாகிய யாழ் மறைமாவட்டத்தை நோக்கிப் பயணித்தார்கள். அவர்களின் விரிந்த பார்வையில் அகன்று நின்ற பணித்தளங்களை நன்முறையில் அடையாளம் கண்டார்கள். மனிதம் காத்து புனிதமாக்கும் துறைகளான ஆத்மீகம், கல்வி, அரசியல், பொருண்மியம், உடல்நலம், உளநலம், கலை, கலாசாரம் இவற்றினூடான மனிதபயணம் முழுமைபெற பலவழி காண வேண்டிய பாரிய பொறுப்பும் அவசியமும் அவர்கள் முன் நிழலாடின. இவை அனைத்தையும் காலத்தின் தேவையுணர்ந்து வெற்றிகரமாக நிறைவேற்ற காரணமாயமைந்தவை இறைபக்தியும் தன்னம்பிக்கையும் அர்ப்பண மனப்பான்மையுமே என்றால் அது மிகையாகாது. அக்கால தேவையின் அவசியம் தம் சேவையில் சவால்கள் என்று உணர்ந்து தம் நாடு, வீடு, மொழி, சுற்றம் விடுத்து முழு உள மகிழ்வோடு எக்காரியத்திலும் வெற்றி கண்டார்கள். வித்தியாசமான மக்கள், கண்டிராத காலநிலைகள், கேட்டிராத மொழிகள், வாய்விட்டுச்சொல்ல முடியாத பயங்கர நோய்கள், இவை அனைத்தின் மத்தியிலும், உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து அரும்பணியாற்றினார்கள்.

இவர்கள் வெற்றிப்பணியின் நினைவுச் சின்னங்களாக நம்மத்தியில் இன்னும் வலம் வரும் சான்றுகள் பற்பல. இன்று ஆல் போல் பெருவிருட்சமாயிருக்கும் இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களும் இவர்களே. ஆலயங்கள், வழிபாட்டுத் தலங்கள்,

யாத்திரை தலங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், பயிற்சி கலாசாலைகள், அச்சகங்கள், அனாதை மடங்கள், சீர்திருத்தப்பள்ளிகள், குருமடங்கள், பங்குகள், பங்கு பணிமனைகள், குடியிருப்புக்கள், புனர்வாழ்வு குடியேற்றத் திட்டங்கள், தொழிற்பேட்டைகள், மறையுரைகள், மகா ஞான ஒடுக்கங்கள் என இவர்கள் சந்தித்தவையும், சாதித்தவைகளும் ஆயிரம் ஆயிரம். இவ்வாறு அமலமரித் தியாகிகளின் வெளிச்சத்தில் மலர்ந்த பணிகளை இரண்டு தலைப்புக்குள் சுருக்கமாக அடக்கலாம்.

1) ஆன்மீகப்பணி
2) கல்விப்பணி

"எளியோர்க்கு நற்செய்தி" எனும் விருதுவாக்கை சிரமேற்றாங்கி ஆண்டவன் இயேசுவை அன்புடன் அனைவருக்கும் அறிவித்து, இறைவனுக்காக மக்களை ஆயத்தம் செய்தனர். கல்வியின் மகத்துவம் அறிந்து, உடல், உளப்பண்பு வளர்ச்சியை குறிக்கோளாய் கொண்டு கத்தோலிக்க சமய அடிப்படையிலான கல்விக்கு வித்திட்டு இலங்கை மக்கள் இம்மை, மறுமை பேறடைய தம்மை அர்ப்பணித்த பெருமை இவர்களையே சாரும்.

இவ்வாறு வட இலங்கையில் மட்டுமல்லாது, தென் இலங்கையிலும் பல எதிர்ப்புக்கள் சவால்களுக்கு மத்தியிலும் தம் பணி அங்கேயும் அமைய வேண்டும் எனும் வாஞ்சையோடு, ஆள் பற்றாக்குறையிலும் ஆர்வமாகச் செயற்பட்டனர். ஆம் அவர்கள் அன்று மேற்கொண்ட பணிகளை சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாக இன்றும் அவர்கள் வழிவரும் அமலமரித்தியாகிகள் பல்வேறு உருவகங்களிலே வாழும் ஏழைகளை இனங்கண்டு பற்பல பணிகளை காலத்தின் தேவையுணர்ந்து ஆற்றி வருகின்றனர் என்பது மெச்சுதற்குரியது.

**அருட்சகோ. அ. யூட் கறோல் அ.ம.தி**
டி மசெனட் இறையிலகம்,
கொழும்புத்துறை.

எந்தவிதமான வேறுபாட்டு உணர்ச்சியையும் காட்டாது குழந்தைகளை வளர்த்திட பழக வேண்டும். எதிர்காலத்தில் நல்லதோர் சமுதாயம் அமைந்திட இதுவே சிறந்த வழியாகும்.

**-சோக்கிரட்டீஸ்-**

# இளமையின் இனிமை


இங்கிதமாய் நடைபோடும் இளைஞனே - நீ
இன்றல்ல நாளையும் இளைஞன் தானா!
இதை எண்ணாமல் துடிக்கின்ற உன் இளமை
இன்றிலிருந்து உணரட்டும் இம்மெய்யை.

வாழ்க்கையில் வசந்தம் வரும் - ஆனால்
வசந்தத்தில் வாழ்க்கை வருவது
இளமையிலடா.........

இளமையைக் கண்டவுடன் ஆடாதே - உன்
இளையவரை ஊக்குவிக்கப் பாடுபடு
முதியவரை மதிக்க பழகிக்கொள் - நாளை
முதுமையை வரவேற்பவன் நீதானே.

இளமையென்னும் கொடுப்பனவு
இயற்கையின் கொடையடா - அதை
இலேசாக இழந்துவிடாதே
இனியொரு தடவை நீ
இரங்கினாலும் தவம் அருங்கினாலும்
கிடைக்காத வரமிது........

## உங்களுடன் கொஞ்ச நேரம்



“அஞ்சலி” புத்தகத்தின் முன் குறிப்பிட்ட வரைபடம் உங்கள் பார்வையில் எவ்வாறான சிந்தனை களை, கருத்துக்களை, உருவாக்கு கின்றது என்பதை எங்களுக்கு கவிதையாகவோ, கட்டுரையாகவோ, சிறுகதையாகவோ, அல்லது சிந்தனைத் துளிகளாகவோ 30.10.2011 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

# ஸ்ரீவரலக்ஷ்மி விரத மகிமை

**அன்பான வாசகர்களே!**

இந்த இதழில் வரலக்ஷ்மீ விரத மகிமை பற்றியும் அவ்விரதம் அனுஷ்டிக்கும் முறை பற்றியும் அறிந்து கொள்வோம்.

தேவர்கள் வசிக்கும் கைலாஸபர்வதசிகரத்தில் பரமசிவன் பார்வதியுடன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தார். அச்சமயம் பார்வதி "நாதா நான் தங்களை ஜெயித்து விட்டேன்" என்றார். பரமசிவனும், "பார்வதி நான் உன்னை ஜெயித்து விட்டேன்" என்றார். இப்படி இருவருக்கும் வாக்கு வாதம் முற்றியது.

அப்பொழுது அங்கிருந்த சித்திரநேமி என்ற கணதேவதையை இருவரும் தீர்ப்புக் கேட்க அவன் பக்ஷபாதத்தால் பரமசிவன் தான் வெற்றி கொண்டார் எனக் கூறினான். அதற்குப் பார்வதி அவன்மீது கோபம் கொண்டு நீ பொய் சொன்னதால் குஷ்டரோகியாகி ஒளியிழந்து தவிப்பாயாக என்று சபித்தார்.

பரமசிவன் வருந்தி "தேவி இந்த சித்திரநேமி எப்பொழுதும் பொய் பேசாதவன் அவன் உண்மையைத் தான் கூறினான் நீ அவனை வீணாக சபித்து விட்டாயே! அவன் மீது நீ அருள் கூர்ந்து அவன் சாபத்தை அகற்றுவாயாக" என்று அவளை வேண்டினார்.

அதற்கு மனமிரங்கிய பார்வதிதேவி "எப்பொழுது அழகிய தடாக தீர்த்தத்தில் தேவ கன்னிகைகள் புண்ணியமான ஒரு விரதத்தை அனுஷ்டிப்பார்களோ, அப்பொழுது உன் சாபம் நீங்கும்" என்று கூறினாள். உடனே அவன் கீழே சாய்ந்து விட்டான்.

பிறகு சித்திரநேமி சில தினங்களில் ஒரு தடாகக் கரையில் குஷ்டரோகியாகி அங்கு வாசம் புரிந்து வந்தான். ஒரு நாள் அங்கே வந்த தேவப் பெண்களைக் கண்டான். தேவி பூஜையில் ஈடுபட்ட அந்தப் பதிவிரதைப் பெண்கள் தேவியை வணங்கி வழிபடுவதைக்கண்டு அம்மையீர் தாங்கள் செய்யும் பூஜை யாது இதை நான் செய்யலாமா? நான் பார்வதியின் சாபத்தால் குஷ்டரோகியாகித் துன்புற்றிருக்கிறேன் என் துன்பம் நீங்கும் வழியைத் தாங்கள் கூறியருள வேண்டும் என்று வேண்டினான்.

அப்ஸரப் பெண்கள் கூறினார்கள் "நாங்கள்" இன்று வரலக்ஷ்மீ விரதம் என்னும் விரதத்தை அனுஷ்டிக்கிறோம். இது திவ்யமானது கோரும் வரங்களை அளிக்கக் கூடியது. சூரியன் கடகத்தில் இருக்கும் போது அவதாவது கங்கையும் யமுனையும் சேரும் காலத்தில் துங்கபத்ரா நதிக்கரையில் சிராவண மாதத்தில் சுக்ல பக்ஷத்தில் வெள்ளிக்கிழமையன்று முறைப்படி மஹாலக்ஷ்மியைப் பற்றியதான இந்த விரதத்தைத் தொடங்க வேண்டும்.

தங்கத்தினால் நான்கு கைகளுடன் லக்ஷ்மியின் பிரதிமையைச் செய்ய வேண்டும். வீட்டைத் தோரணங்கள் கோலங்கள் முதலியவைகளால் அலங்கரிக்க வேண்டும். வீட்டின் கிழக்கு திக்கில் முக்கியமாக ஈசானிய மூலையில் ஒரு படி அரிசியைப் பூமியில் பரப்பி அதன்மீது ஒரு கலசத்தை வைத்துத் தீர்த்தத்தை நிரப்ப வேண்டும். பொன்னையும், பழங்களையும் துளிர்களையும் அதன்மீது வைத்து புதிய வஸ்திரத்தைச் சுற்ற வேண்டும். அந்தக் கலசத்தின் மீது லக்ஷ்மியின் பிரதிமையை வைத்து முறைப்படி பூஜை செய்ய வேண்டும்.

இவ்வாறு தேவகன்னிகைகள் செய்த இந்த பூஜையை சித்திரநேமி இமை கொட்டாமல் பார்த்து வந்தான். ஹோமப் புகையை நுகர்ந்ததாலும் நெய்த் தீபத்தைக் கண்டதாலும் அவனுடைய குஷ்டநோய் நீங்கித் தங்க நிறம் பெற்றான்.

இவ்வாறு மன அமைதியுடன் இந்த விரதத்தை மேற்கொண்ட ஐந்து வகையான தானம் செய்து கதையைக் கேட்க வேண்டும். பிறகு மௌனமாக இருந்து ஐவகை ஆரத்திகளைச்செய்து பூஜிக்க வேண்டும்.

விரதம்அனுஷ்டிக்கப்போகிறவர்கள் ஒரு பாக்கு ஒரு வெற்றிலை (சுண்ணாம்பு சேர்க்காமல்) இவைகளைக் கடித்து மெல்ல வேண்டும். அப்பொழுது வாய் சிவக்காமல் இருந்தால் இந்த விரதத்தை மேற்கொள்ளக் கூடாது. நான் முயற்சியுடன் எல்லாவற்றையும் அளிக்கும் இந்த விரதத்தை மேற்கொள்கிறேன் என்று கூறி தானும் விரதத்தை செய்து தேவர்கள் அனைவரையும் அனுஷ்டிக்கச் செய்தான்.

பிறகு பிராமணனுக்கும், ஸன்யாசிக்கும், தெய்வத்திற்கும் பிரம்மச்சாரிக்கும், சுவாஸினிக்கும் முறையே ஐந்து வாயன தானங்களைச் செய்தான். அதன் பின் தேவிக்கு நமஸ்காரம் செய்து தன் இருப்பிடம் சென்றான்.

பிறகு கைலாஸம் சென்று பார்வதி பரமேஸ்வரரை வணங்கி அவர் அருகில் நின்று தேவி வரலக்ஷ்மியின் அருளால் தங்கள் திருவடியைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது என்று கூறி வணங்கினான். அப்பொழுது பரமசிவன் "இன்றுமுதல் நீ இந்த கைலாயத்தில் சகல போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பாயாக பிறகு இந்த விரதத்தின் மகிமையால் வைகுந்தலோகம் சேருவாய்" என்றார்.

முன்பு பார்வதியும் ஸத்புத்திர லாபத்திற்காக இந்த விரதத்தை அனுஷ்டித்தாள். அதன் மகிமையில் இவளுக்கு சண்முகன் தோன்றினான். இந்த விரதத்தைப் பதிவிரதைப் பெண்கள் அனுஷ்டிப்பார்களாக.

மற்றும் குண்டினம் என்ற நகரத்தில் சாருமதி என்ற பெண் இந்த வரலக்ஷ்மீ விரதத்தை உபதேசிக்கப் பெற்று சிராவணமாதம் சுக்லபக்ஷபூர்ணிமையுடன் கூடிய வெள்ளிக்கிழமையன்று தேவியை வரித்து ஸகல பாக்கியங்களையும் பெற்றாள்.

* விக்கிரமாதித்தியன் நந்தனிடமிருந்து: ராஜ்யத்தைப் பெற்றான்.

* மனைவியில்லாத நந்தன் இந்த விரதத்தைச் செய்து அழகிய மனைவியை அடைந்தான். அவன் மனைவியும் பிள்ளைப் பேற்றுக்காக இந்த விரதத்தை அனுஷ்டித்தாள். அதன் மூலம் மூவுலகையும் காக்கும் மகனை அவள் பெற்றாள்.

இப்படிப்பலர் அனுஷ்டித்து பலன் பெற்றதால் இந்த சிறந்த வரலக்ஷ்மீ விரதம் இவ்வுலகில் பரவியது.

எனவே சிராவண மாதம் சுக்லபக்ஷத்தில் இரண்டாவது வெள்ளிக்கிழமையன்று வரலக்ஷ்மியை மகிழ்விக்கக் கூடியதான இந்த ஸம்பத் விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் பெண்மணிகள் இவ்வுலகில் சகல போகங்களையும் அனுபவித்தபின் வைகுந்தம் சேருவார்கள். மேலும் இவ்விரத மகிமையை படிப்பவர்களும் கேட்பவர்களுக்கும் வரலக்ஷ்மியின் அருளால் தன தான்ய ஸம்பத்துக்கள் உண்டாகும்.

-வெண்ணிலா-

# தற்கொலை



தமிழர் சமுதாயத்தில் நீண்டகாலம் தொடர்ந்து வந்த யுத்தம் மனித உயிர்களையும் உடல் உறுப்புக்களையும் இழக்க வைத்து எமக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் அறியாத துயரங்களைத் தந்துள்ளது. இத்தகைய துயரங்களின் பின்னணியில் இயல்பாகவே எமது மக்களின் உள்ளங்களில் எதிர்மறை உணர்ச்சிகள் மனவெழுச்சிகள் தவிர்க்க முடியாதவை.

எதிர்மறையான மனிதனால் ஜீரணிக்க முடியாத சம்பவங்களைப் பார்த்தும் கேட்டும் அனுபவத்தினூடாக கண்டும் எமது மக்கள் கடினமான வாழ்க்கைப் பாதையினைக் கடந்து வந்தவர்கள் அவர்களின் அனுபவத்திலும் பார்க்க கொடுமையான வேறு அனுபவங்கள் வேறு மக்களுக்கு நடந்திருக்க முடியாது என்பது விரும்பத்தகாத ஒரு உண்மையே.

இருப்பினும் இத்தகைய மனப்பாதிப்புக்கும் மனவெழுச்சிக் குழப்பங்களுக்கும் பின்னணியில் எமது மக்களின் நடத்தைகள் உளப் பாதுகாப்புக் கவசங்களை (Defence Mechanism) அணிந்து கொண்டு வெளிக்காட்டும் சில பாதகமான நடத்தைகள்.

01) மது போதைக்கு அடிமை ஆதல்
02) புகைத்தல்
03) வன்முறை நடத்தைகளில் ஈடுபடல்
04) தன்னம்பிக்கையினை இழத்தல்
05) சமூகத்துடன் குடும்பத்துடன் ஒத்துப்போக மறுத்தல்
06) தன்னைச் சூழவுள்ள யாவரையுமே நம்ப மறுத்தல்

இத்தகைய நடத்தைகளினதும் உணர்வுகளினதும் உச்ச வெளிப்பாடே "தற்கொலை" என்று கூறலாம். அத்தகைய தற்கொலை உணர்வுள்ளவர்களைக் கண்டறிதல் மட்டுமன்றி இவ்வுணர்வு ஏற்படுவதற்கு காரணம் என்ன? அதை எவ்வாறு தவிர்க்கலாம் என்பவை பற்றி விரிவாக நோக்குதல் அவசியமாகும்.

"தற்கொலை" என்றால் தன்னைத்தானே அழித்தல் என்று பொருள்படும். முதலில் ஒருமனிதன் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் உரிமை இல்லாதவன் என்ற உண்மை எமக்குத் தெரிந்திருத்தல் வேண்டும்.

சட்டப்படி தற்கொலை முயற்சி தண்டனைக்குரிய குற்றமாகும். அத்துடன் எல்லா சமயங்களும் தற்கொலை மரணம் இறைபதம் அடையும் மனிதனின் இறுதி நிலைக்கு தடைபோடும் ஒரு அம்சம் என்றே கருதுகின்றனர். தற்கொலை செய்பவர்கள் இறைவனை அடையமுடியாது என்ற ஆன்மீகத் தண்டனையும் அவர்களுக்கு உண்டு.

உளவியலாளர்கள் தற்கொலை ஒரு திடீரெனத்தோன்றி மறையும் தற்காலிக நோய் போன்றது என்று கூறுகின்றார்கள். சிக்மன் பிராய்ட் கூறும் தத்துவத்தின்படி "ஒவ்வொரு மனிதர்களுக்கும் இயல்பாகவே இறப்புக்குறித்த ஆர்வம் இருக்கிறதும் தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ள புரியாத ஒன்றைப் புரிந்து கொள்ள இதுவரை அனுபவித்து அறியாத ஒன்றை அனுபவிக்க மனிதர்களுக்குள் ஆர்வம் இருக்கிறது" என்றார் அவர்.

எமது மூளையில் சுரக்கும் 'செரடோனின்' என்ற வேதிப்பொருள் குறைவாக சுரக்கும் போது மன அழுத்தம் மன இறுக்கம் என்பன ஏற்பட்டு தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதே வேளை தற்கொலை செய்து மரணமானவர்களின் மூளையினை ஆராய்ந்த போது Impramine Receptor Sites குறைவாக இருப்பது தெரிய வந்துள்ளது.

ஆகவே 'செரடோனின்' சுரத்தலை தூண்டி விடும் மருந்துகளைக் கொடுப்பதாலும் Impramine Receiptor சுரக்கும் அளவையும் இடங்களையும் அதிகரிப்பதாலும் அதற்கான தூண்டி மருந்துகள் ஊடாக தற்கொலை எண்ணம் கொண்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கலாம். யாவற்றிற்கும் மேலாக தற்கொலை செய்து கொள்பவர்களிடம் அதற்கு முன்னதாக சில மாற்றங்கள் காணப்படுகின்றன. உடனிருப்பவர்களால் அந்த மாற்றங்களை உணர முடியும்.

தற்கொலை எண்ணம் திடீரென எழுச்சி பெறுவதாக இருந்தாலும் அதற்கான அடிப்படைக்குணாம்சங்கள் சிலரிடம் அடையாளம் காணப்படலாம். இவர்கள் வாழ்க்கை பற்றிய நம்பிக்கை அற்றவர்களாக இருப்பர், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பவர் மனம் விட்டுப் பேசத் தயங்குவர், தனிமையை அதிகம் விரும்புவார்கள், மனச்சோர்வாக இருப்பர், சலிப்பாகப் பேசுவார். என்ன வாழ்க்கை, வாழ்ந்து என்ன பயன்?, என்னால் யாருக்குத்தான் இலாபம்? என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவார். சாவைப் பற்றி அடிக்கடி கதைப்பர். சாவைப்பற்றிய பயம் கூட இவர்களுக்கு இருக்கும்.

PUBLIC LIBRARY
JAFFNA



மாணவர்களுக்கு மட்டுமல்ல வளர்ந்தவர்களுக்கும்கூட வெற்றியை மட்டுமல்ல தோல்வியைத் தாங்குவதற்கும் பயிற்சி தேவைப் படுகின்றது. "வாழ்க்கை என்பது மேடு- பள்ளம், வெற்றி-தோல்வி, புகழ்-இகழ் என எதிர் மறைகளின் கூட்டுத்தான் என்பதை புரியவைத்தல் அவசியமாகும். கல்வி என்பது புள்ளிகளையும் பெறுபேறுகளையும் பெறுவதற்கு மட்டுமான செயற்பாடல்ல. வாழ்வை வாழவும் கற்றல் வேண்டும். பொருத்தமான அமைவான சமூக ஒப்புரவுடனான நடத்தை மாற்றத்தைக்காட்டி தன்னையும் தான் சார்ந்த சூழலையும் மகிழ்வாக வைத்திருக்கப்பழகுதலும்கூட கல்வியின் பணியாகும்.

பொதுவாக ஆண்களைவிட பெண்களே தற்கொலை முயற்சியில் அதிகம் ஈடுபடுவதாக ஒரு சமூக ஆய்வு கூறுகிறது. இதற்கு காரணம் பெண்கள் பெரும்பான்மையினர் சார்ந்து வாழ்பவர்களாகவும் எமது சமூக அமைப்புக்களால் ஆளுமைப் பண்புகள் அடக்கி ஒடுக்கப்பட்டு திட்டங்களைத் தீட்டவும் தீர்மானம் எடுக்கவும் சவால்களை எதிர்த்து வெற்றிகளை ஈட்டவும் அவர்களுக்கு வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதனால் தாங்கு திறனை இழந்து விட்ட பெண்கள் மாற்றுவழியாக தற்கொலையினை தெரிவு செய்கின்றனர். அறியாமையின் நிமித்தம் அவர்கள் எடுக்கும் தற்கொலை முடிவினால் மரணத்தின் பின்னரும் அவர்களின் கௌரவத்திற்கும் அவர்களின் ஆன்மாவின் உண்மைகளிற்கும் களங்கம் ஏற்படுவதனை அந்தக் காலத்தில் அவர்கள் உணரத் தவறி விடுகின்றனர்.

முக்கியமாக எமது தமிழ் சமுதாயத்தின் தற்கொலை அளவு உயர்வடைவதற்கு பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல், உளவியல் காரணிகள் கூறப்பட்டாலும் அதனை தடுத்து நிறுத்துவதற்கான செயற்திட்டங்களும் விழிப்புணர்வும் தொடர்பாகவே நாம் அதிகம் பேச வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த வகையில் குறிப்பாக இளம் பிராயத்தினரின் தற்கொலை எண்ணமும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் பற்றி நோக்குவோம்.

(தொடரும்.......)

**T. சிறீகமலநாதன்,**
மானிப்பாய்.

PUBLIC LIBRARY
JAFFNA



# வெள்ளிக்கிழமை பள்ளிக்கூடம்

கல்வி கசக்கிறதா? பிள்ளாய்!
பிள்ளாய் உனக்கு கல்வி கசக்கிறதா?
இப்பொழுது கசக்கும் - பிற்பொழுது
இனிக்கும்.
கல்வியைக் காதலித்துப் பார் - காதல் கூட
உனக்கு கசக்கும்.
காலம் கணப் பொழுதில் கரைந்து போகிறது - உன்
கைகள் அதற்கு முன் களைத்துப்போகிறது
காலம் கைகள் இரண்டிற்கும் இடையில்
களைகள் முளைக்கிறது
கண்ணைக் கசக்கி கண்ணைக் கசக்கி
கடைசி வரை கற்றுப் பார்
O/L, A/L, பல்கலைக்கழகம்
இதுவல்ல கடைசிவரை.
கல்விக்கு கடைசிவரை இல்லை கரை.
தண்ணீர் பொழியும் வானங்கூட எல்லையில்லை
கல்லறை கடைசி வரை
ஆகவே கடைசி வரை
கண்ணீர் வரும். காசு போகும்
களைப்பு வரும்
கள்ளக் குணம் உன்னில் வரும்
காதல் வரும் . கல்யாணமும் வரும்
வருகிறதெல்லாம் வரும்
படிப்பு வருகிறதா - என்று பாரு



நடிக்காதே - நீ
நடிக்காதே படிக்கிறதாய் நீ நடிக்காதே
இதை உன்னை பெற்றவர் பார்த்தால்......?
உன்னை பெற்ற வயிறு பார்த்தால்
துடி துடித்துப் போவார்கள்
நெருப்பாய் வெந்து போகும்
கடலை. காசு. நகை. நட்டு.
உடை. உல்லாசம் - எல்லாம்
நாசமாய் போகும் - உன் உடல்

சுவாசிக்க மறந்தால்
கல்வியை சுவாசித்துப் பார்
உனக்கு விசுவாசம் வரும்.
உன்னையே விசுவாசிப்பார்கள்
கல்வியை சுவாசித்துப் பார் - உன் ஊர்
உன்னை சுவாசிக்கும்
உயிரையே விடும் - உனக்காக.


பெற்றோர்களே! பெரியோர்களே! -என்
உயிரிலும் மேலான உறவுகளே!
எங்கேயாவது மாலை 6 மணிக்குப் பிறகு
காலை 7 மணிக்கும் பிறகு
வீதியில் வலம் வரும் கற்போரை விட்டு விடாதே
றொட்டிக் கடையில், றோட்டுக் கரையில்
வெட்டிக் கதையில், வீண் விளையாட்டில்
பூங்காவில், புரையோடிப் போன விழாக்களில்,
விட்டு விடாதே
விரட்டிக் கொண்டு போ
விரட்டிக் கொண்டே போ வீடு வரை
வீடு வரும் வரை.
போய்ப்பாரு அது உன் தம்பி, அது
உன் தங்கை
உன் வீடு, உன் உறவு
உனக்கு தெரியாமலே உன் மகள் உன் மகன்
ஊர் சுற்றி உருப்படாமல் போகிறது.



திங்கள் ஞாயிறின் களைப்பு,
செவ்வாய் செத்தவருக்கு செலவு,
புதன் பூப்புனித நீராட்டு விழா,
வியாழன் வீட்டில யாருமில்லை,
வெள்ளி வயிற்றுவலி, இதனால்தான்
வெள்ளிக்கிழமை பள்ளிக் கூடம், மன
வேதனையின் வடிவம்
வெள்ளிக் கிழமையும் பள்ளிக்கூடமாம் - மாணவருக்கு
வேதனை தரும் கடிவாளம்.

ஜெயம் அமுதா...

# வறுமை ஒழிப்பு!



தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம் என்றார் மகாகவி பாரதியார். தனி ஒருவனாக போராடி பாரதியார் மட்டும் இப்படிக் கவலைப் பட்டதால் இன்னும் வறுமை ஒழியவில்லை. இது தொடரத்தான் போகிறது. அவருடன் அணிஅணியாக பலர் திரண்டு அவரின் கருத்துக்களை செயற்படுத்தி இருந்தால் நிலைமை வெகுவாக மாறி இருக்கும். முன்னேற்றம் கண்டிருக்கும்.

'திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்பார்களே – அது போலத்தான் வறிஞனாகப் பார்த்து திருந்தாவிட்டால் வறுமையை ஒழிக்க இயலாது. வறுமையைப் பற்றி வறியவர்களை தவிர யார் யாரோவெல்லாம் கவலைப் படுகிறார்கள். உலகின் முதலாவது பணக்காரன் - மைக்கிரோ சொவ்ட் கணனி நிறுவன அதிபர் பில் கேட்ஸ் அவர்கள் குறிப்பிட்ட வாசகம் ஒன்று பிரபல்யமானது.

'ஒருவன் ஏழையாக பிறந்தால் அது அவனுடைய தவறு அல்ல. அவன் ஏழையாக இறந்தால் அது அவனுடைய தவறுதான்' என்கிறார் அவர். வாழும் காலத்தில் அவன் முயற்சி எடுத்திருக்க வேண்டும். தனது முயற்சியால் முன்னேற்றம் கண்டிருக்க வேண்டும். மற்றவர்கள் வந்து கைதூக்கி விடுவார்கள் என்று காத்திருக்க முடியாது.

தனது மனைவி பிள்ளைகளுக்கு உழைத்துக் கொடுக்க வழி தெரியாதவன் உழைத்துக் கிடைத்ததையும் குடித்துக் கூத்தடித்து முடித்துவிட்டு வரும்போது குடும்பத்தில் உருவாகும் குழப்பம் உலகினுக்கு வறுமையாகத்தான் தெரியும். இவனுக்கு உணவில்லை என்றால் ஜெகத்தினை அழிக்கப் புறப்பட்டார் பாரதியார் என்றால் அதுதான் இல்லை.

'நல்லார் இடத்தில் பட்ட வறுமை கொடிது. ஆனால் கல்லார் இடத்து அகப்பட்ட செல்வம் படுத்தும் பாடோ அதனைவிட மிக மிகக் கொடிது' என்கிறார் திருவள்ளுவர். பணம் அவனைப் படுத்தும் பாட்டையும் அவன் பணத்தைப் படுத்தும் பாட்டையும் விட வறுமையே மேலானது எனலாம்.

ஒருவரின் வருமானத்தை மட்டும் வைத்து அவரை ஏழை பணக்காரர் என்றெல்லாம் முடிவு கட்டிவிட முடியாது. அவருடைய வாழ்க்கை முறை பழக்க வழக்கங்கள் நிதிப் பயன்பாடு நிம்மதி எனப் பல காரணிகள் அந்த நிலைமையை தீர்மானிக்கின்றன. வறுமையில் செழுமையாய் வாழ் என்று முன்னோர்கள் சொல்லிவைத்த அறிவுரை எவ்வளவு அர்த்தம் பொதிந்தது. 'முயற்சி திருவினை ஆக்கும் அது இல்லாமை வறுமைக்கே வழிவகுக்கும்' என்றெல்லாம் வள்ளுவர் அழகாக கூறி இருக்கிறார்.

பாடுபட்டுத் தேடிய செல்வத்தில் பங்கொன்றை சேமித்து மிகுதியை தேவை கருதி ஆராய்ந்து செலவழிப்பதில் உள்ள சுகம் அனுபவித்தால் தான் புரியும். நிவாரணத்தில் தங்கி இருக்கிறீர்களே அதை விடுத்து சுயமாக வியர்வை சிந்தி உழைத்து அந்தச் சம்பாத்தியத்தில் சாப்பிட்டுப் பாருங்கள் கூழாக இருந்தாலும் அதன் ருசியே தனிதான் என்றேன்.

இடாம்பீக வாழ்வு கொண்டு வரும் தாழ்வு என பண்டைய பருத்தித்துறை கிட்டங்கி ஒன்றில் கொட்டை எழுத்துக்களில் எழுதப் பட்டிருந்த வாசகம் இன்றும் என் கண்களில் தெரிகிறது. இன்றைக்கு இடாம்பீகமாக வாழ பல குறுக்கு வழிகள் திறந்திருக்கின்றன. வெளிநாட்டுப் பணம் சும்மா வந்து குவிகிறது. நோகாமல் இருந்து சாப்பிடவும் திமிரெடுக்கவும் நேரம் கிடைக்கிறது. அந்த மனப்பாங்கு ஒழியும்வரை கையில் பணம் இருந்தாலும் நிலைமை வறுமையேதான்.

சிக்கனமும் சேமிப்பும் பற்றிய எனது கட்டுரைக்கு பதில் எழுதியவர் சேமிப்புக்கு பணம் அவசியமில்லை பழக்கம்தான் அவசியம் என்றார். அதுபோல வறுமை என்பதும் பணத்தின் அளவை பொறுத்தது அல்ல, மனத்தின் அளவை பொறுத்தது என்றே கூறவேண்டும். இன்று வறுமை ஒழிப்பு பற்றி அதிகம் பேசப்படுகிறது. அதற்காக இலகு முறையில் நுண் நிதி கடன்கள் சமூகத்தில் தாராளமாக கிடைக்கின்றன. பல சமூக நிறுவனங்கள் சமுர்த்தி சங்கங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் வங்கிகளிடம் இதற்கென போதிய நிதி கையிருப்பில் இருக்கிறது. தவிர தொழில் நுட்ப ஆலோசனைகள் வழிகாட்டல்கள் கருத்தரங்குகள் குழு செயற்பாடு என பல உதவிகளும் கிடைக்கின்றன. அதை பெற்று உரிய தேவைக்கு மட்டும் பயன்படுத்தி சிறந்த விளைவுகளை பெறுவதன் மூலம் தமது பொருளாதாரத்தையும் நாட்டின் உற்பத்தி திறனையும்

சிறப்படைய செய்ய வேண்டும் என்பதே திட்டமிடலாளர்களின் எதிர்பார்ப்பு ஆகிறது.

ஆனால் நிதியை சரிவர பயன்படுத்தி உருப்படியாக முன்னேற பலருக்கு ஆர்வம் குறைவாகவே இருக்கிறது. கடன் பணத்தை மோட்டார் சைக்கிளை வாங்கவும் ஆடம்பர பொருட்களை கொள்வனவு செய்யவும் பயன்படுத்துவதில் உள்ள ஆர்வம் அதிகமாக உள்ளது. இதனால் வறுமை ஒழிப்பு நோக்கங்கள் பிழைத்து விடுகின்றன. அத்தோடு உற்பத்தியும் பொருளாதாரமும் இலக்கை அடைய முடியாமல் திணறுகின்றன.

மேலும் சிறிய கடன்களை பெறுவதில் ஆர்வம் காட்டா பின்னடிக்கும் பலர் தமது சக்திக்கு மீறிய பெரிய கடன்களை அதிகரித்த வட்டிக்கும் பெறத் துணிகிறார்கள். இத் திட்டமிடாத நடவடிக்கை கடன் பழுவையும் மன உளைச்சலையும் அதிகரிக்குமே தவிர எப்போதும் வெற்றிகளை குவிக்கும் என எதிர்பார்க்க இயலாது.

வாழ்க்கையில் வறுமை நிலையில் இருந்துகொண்டு ஆடம்பரத்தை தவிர்த்து வாழ் என உபதேசம் கூறவில்லை. தமது அத்திவாரத்தை முதலில் சற்று பலப்படுத்திக் கொண்டாக வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு ஆகிறது.

**-மு.சிவநேசன்-**
முகாமையாளர் - மக்கள்வங்கி

## கணினி பற்றிய தகவல்கள்

முதல் கணக்கு இயந்திரம் :- அபாக்கஸ்
முதலில் உருவான கணிப்பொறி மொழி :- Fortan
கணினியின் தந்தை எனப் போற்றப்படுபவர் :- சாள்ஸ் பபேஜ்
கணினி யுகத்திற்கு விதியிட்டவர்கள் :- சீனர்கள்
கணினி மொழியை அறிமுகப்படுத்தியவர்கள் :- தோமஸ் கனடி, ஜோன்கெமனி
முதன்முதலில உருவாக்கப்பட்ட தனிப்பட்ட கணினியின் பெயர் :- அப்பிள்
முதலாவது தானியங்கி கணினி :- எனியாக் 1945இல் கண்டறியப்பட்டது
கணினிகளை உற்பத்தி செய்வதில் புகழ்பெற்ற நிறுவனங்கள் :- IBM , Microsoft
முதலாவது மின்னணு Computer :- கொலாசஸ் I - 1943ல் கண்டறியப்பட்டது.

**J.றாகவி** - தரம் 10B
யா/இமையாணன் அ.மி.த.க.பாடசாலை

# உன்னை விடு என்னைப்பார்




இது சுவரிலே சுவாரசியமாக ஒட்டப்பட்ட ஓர் திரைப்படத்தின் பெயர். நான் இந்த படத்தை பார்க்கவில்லை என்றாலும் இவ்வட்டைப் படத்தை பார்க்க முடிந்தது.

ஓர் குழந்தையின் வளர்ச்சியில் அன்னையின் பங்களிப்பு காத்திரமானது. 'தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை' என்பார்கள். இன்று நாம் காணும் கொலைகள், கொள்ளைகள், அடாவடித் தனங்கள், அட்டகாசங்கள் என பட்டியலிடக்கூடிய நிகழ்வுகள் எல்லாவற்றையும் இன்று தொட்டில்களில் கிடக்கும் குழந்தைகள் தான் செய்கின்றார்கள் என்றால் அதை மறுப்பதற்கில்லை. அழகாக சிரிக்கும் இக் குழந்தைகளால் எப்படி இப்படியான அசிங்கமான செயல்களை வளர்ந்த பின் செய்ய முடிகின்றது? ஏன் அப்படியான அழகோடு வாழ முடியாது? இப்படி சிந்திக்கையில் "எந்தக் குழந்தையும் தெய்வக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற பாடல்வரிகள் என் நினைவுகளை உரசிச் செல்ல மறக்கவில்லை.

வேகமாக நகர்ந்து செல்லும் உலகின் வேகத்தில் தம்மை தொலைத்துவிட்ட பெற்றோர்கள், குழந்தைகளை மறந்து விடுகின்ற துர்ப்பாக்கிய நிலை தோன்றுவது தவிர்க்க முடியாது. ஆனால் இந்த தாய்மார் தமது தலையாய பொறுப்பை செவ்வனே செய்ய வேண்டிய கட்டாய தேவையில் உள்ளனர். தங்களது சுகங்கள் , இன்பங்கள், சுய இலாபங்களுக்காக குழந்தைகளை எந்த சூழ்நிலையிலும் பலிக்கடாக்கள் ஆக்கக்கூடாது. ஏனென்றால் அவர்கள் நாளைய சமுதாயத்தின் தலைவர்கள். அவர்கள் உருவாக்கவேண்டிய பாரிய பொறுப்பு இந்த பெற்றோரிடமே உண்டு. இவர்கள் தமது கடமையில் இருந்து விலகும் பட்சத்தில் குழந்தைகள் "உன்னைவிடு என்னைப்பார்" என கேட்பது தவிர்க்க முடியாததாகின்றது.

**-நெடுமாறன்-**

# முரண்பாடு பற்றிய பார்வை



தற்கால மனித வாழ்க்கையின் பிரதானமான ஓர் அம்சமே முரண்பாடு எனலாம். சமூகமும் வாழ்க்கையும் மென்மேலும் சிக்கார்ந்தவையாக மாறியுள்ளமையே தற்காலத்தில் முரண்பாடுகள் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.


முரண்பாடு என்றால் என்ன என்று நோக்கும் போது

“இருவர் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலானோர்க் கிடையில் ஏதாவது ஒரு அடிப்படை நோக்கம் தொடர்பாக பொது இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முடியாததன் விளைவாக அவர்கள் ஒருவரை எதிரிகளாக கருதுவதற்கு தூண்டப்படுவதனாலும் இதனடிப்படையில் செயற்படுவதனால் ஏற்படுகின்ற பிரச்சினைக்குரிய ஒரு நிலைமை முரண்பாடு எனலாம். இது அமைப்புக்கள் இனங்கள் மக்கள் குழுக்கள் எல்லோருக்கும் பொருத்தமானது ஆகும்.

முரண்பாட்டை எடுத்துக்கொண்டால் இதில்

- இருவர் அல்லது இரண்டிற்கு மேற்பட்டோர் காணப்படுவர்.
- இவர்களுக்கு ஒரு அடிப்படை நோக்கம் (தேவை) தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வரமுடியாமல் போதல் (அமைப்பு)
- இதன் காரணமாக மற்றவர் தனது தேவையை தடுக்கின்றார் என நோக்குதல் (மனப்பாங்கு)
- இந்த நோக்குதலின் அடிப்படையில் ஒருவருக்கு ஒருவர் எதிராக செயற்படல் (நடத்தை)

இதை C.R.Mitchell என்ற சமூகவியலாளர் கூறும் போதும் எந்த ஒரு முரண்பாட்டிலும் மூன்று பரிமாணங்கள் இருப்பதாக சொல்கின்றார். இவைதான் அமைப்பு, மனப்பாங்கு, நடத்தை




இதில் அமைப்பு என்பதை பார்க்கும் போது எந்த சூழ்நிலையில் முரண்பாடு ஏற்பட்டது அமைப்புரீதியாகவோ பொருளியல் கலாசாரம் அரசியலாகவும் இருக்கலாம். இதில் சமூக மக்களின் பிரச்சினைகள், இடர்கள், நோக்கங்கள், தேவைகள் வேறுபட்டவையாக காணப்படலாம். இதனால் மனப்பாங்கு வேறுபட்டவையாக அமையும். இது பிழையாக சிந்திக்கும் பொழுது சரியாக இருக்கும். ஆனால் தான் சொல்வது தான் சரி என்ற மனநிலை காணப்படும். இதன் போது நடத்தை வன்முறையாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் காணப்படும்.

எனவே மனப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டுவரும்போது அமைப்புரீதியானது மாற்றமடைவதுடன் நடத்தை நல்ல முறையில் வெளிப்படுத்துவதற்கு காரணமாக அமையும். ஆனால் மனப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டுவருவது கடினமான விடயம்.

(தொடரும்.......)

**யோ.சோபனா**

**C.P.R**

---

உலக நீதி மன்றம் உள்ள இடம் - ஹேக்
அவுஸ்ரேலியாவிலுள்ள நீளமான ஆறு - முர்ரே
உலகின் மிகப்பெரிய தீவு - கிறீன்லாந்து
மனித உடலின் குளிர்ச்சியான பாகம் - மூக்கின் நுனி
கடல்களின் அரசி என அழைக்கப்படும் நாடு - இங்கிலாந்து
பெற்றோலைக் கண்டு பிடித்தவர் - காரல் பென்ஸ்
உலகில் நிலப்பரப்பே இல்லாத இடம் - வடதுருவம்
நமது நாக்கில் உள்ள சுவை நரம்புகளின் எண்ணிக்கை - 3000
உலகில் பலமுறை ஒஸ்கார் விருதைப் பெற்றவர் - வோல்ட் எலியாஸ் டிஸ்னி
வாத்துக்கள் ஒரே சமயத்தில் இடும் முட்டைகளின் எண்ணிக்கை - 17

**வ.துஷாளினி**
தரம் 8 - அஞ்சலியகம்

# கம்பனின் கவித்திறன்

கம்பனுக்குத் தமிழ்மொழி வளைந்து கொடுத்தது. இதனால் அவன் சந்தர்ப்பத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு கவிதைகள் புனைந்தான். கம்பன் கவிகள் தமிழ்நாடு முழுவதும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இதற்கு முக்கிய காரணம் அவனது கவித்திறனாகும். “கல்வியிற் பெரியன் கம்பன்” என்ற வாய்மொழி மரபு கம்பன் கவித்திறனுக்கு மக்கள் கொடுத்த அங்கீகாரத்தை காட்டி நிற்கின்றது. புவிச் சக்கரவர்த்திகள் அரசோச்சிய காலத்தில் தன் கவித்திறத்தால் கவிச்சக்கரவர்த்தியாக கம்பன் உயர்ந்தமை அவனது கவித்திறனின் நிலைபேறாகும்.

இராமாயணச் சம்பவங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமாகப் படைக்கப்பட்டுள்ளன. விஸ்வாமித்திர முனிவருடனும் தம்பி இலக்குமணனுடனும் மிதிலை நகர வீதியில் சென்று கொண்டிருந்த இராமனும் மாடத்தில் பூம் பந்து விளையாடிக் கொண்டிருந்த சீதையும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்ளும் காட்சியை

“உண்ணவும் குலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்”

என்ற பாடலடிகள் மூலம் வெளிப்படுத்தி தெய்வீகக் காதல் மரபை தமிழகமெங்கும் போற்றும்படியாகச் செய்தான்.

இராமன் ‘சிவதனுசு’ என்ற வில்லை முறித்து சீதையை மணமுடித்த நிகழ்வை “எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்” என்ற அடிகள் மூலம் நாடக பாணியில் நடத்திக்காட்டிய பாங்கும் கம்பனின் கவித்திறனை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை வேந்தனான இராவணன் வீரத்தைக் களத்தே போக்கி வெறுங்கையோடு நின்றபோது “இன்று போய்ப் போர்க்கு நாளை வா” என்று இராமன் கூறுவதாகச் சித்திரித்த கம்பனின் கவிநயத்தை வியந்து போற்றாதவர்களே இல்லை.

இராமன் மணிமுடி புனையவில்லை என்ற சோகத்தை

“ஆவும் அழுத அதன் கன்றழுத அன்றலர்ந்த
பூவும் அழுத புனற் புள்ளழுத”

என்று கூறிச் செல்லும் பாங்கு கற்றோர் மனங்களைக் களிப்புறச் செய்வதாகும்.

இராவணன் இறந்த செய்தி கேட்டு அவனது மனைவி புலம்பும் போது,

"கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து தடவியதோ"

என்ற பாடலடிகள் மூலம் கம்பன் தனது கவியாற்றலைச் சந்தர்ப்பத்திற்கேற்ப கையாண்ட திறனைக் காண முடிகின்றது.

சூர்ப்பனகை என்ற அரக்கி வஞ்சத்துடன் வந்ததை "அஞ்சொலின மஞ்ஞையென அன்னமென மின்னும் வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்" என்று அவள் மென்மையையும் அதே நேரத்தில் அவள் மனதின் நஞ்சினையும் கூறுகின்றான். இப்பாடலில் சந்த இன்பம் பொலியப் பாடியது அவனது கவித்திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இது மட்டுமன்றி உறங்குகின்ற கும்பகர்ணனை அவலமாகப் படைவீரர்கள் எழுப்பும் போது

"கறங்கு போல விற்பித்த காலதூதர் கையினிற் கிடந்து உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்து உறங்குவாய்" என்ற பாடலடிகள் மூலம் அவனது கவித்திறனை நாம் கண்டு தெளியலாம்.

கம்பன் வழக்குத் தமிழை மிக இலாவகமாகக் கையாண்டான். இதனால் கம்பராமாயணத்துச் சொற்களும் சொற்றொடர்களும் தமிழ் மக்கள் நாவில் மிகச் சாதாரணமாக வழங்கி வருவதைக் காணமுடிகின்றது.

"தோள் கண்டார் தோளே கண்டார்"
"கொடுமெனக் கூனி தோன்றினாள்"
"அன்றலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா"
"வெறுங் கையோடு இலங்கை புக்கான்"
"கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்"
"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"

இவ்வாறான பல தொடர்கள் மூலம் கம்பன் தமிழ் மக்களிடையே இன்றும் உலவிக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. இதனை விட அவனது கவிச் சிறப்பிற்கு வேறென்ன எடுத்துக் காட்டு வேண்டும்.

**செல்வி.க. குகநாயகி (ஆசிரியர்)**
யா/பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்,
பருத்தித்துறை.

# இளமை இனிமை



## இளைஞர்களே!
## தன்னம்பிக்கையை இழக்காதீர்கள்.

இளைஞர் சமுதாயமே! நீங்கள் தான் ஒரு நாட்டின் முக்கிய வளமாக கருதப்படுகின்றீர்கள். நீங்கள் நினைத்தால் எந்த நிலைமையையும் மாற்றிவிடும் தன்மை உங்களுக்குள் உண்டு. இதனால் ஒரு நாடு தன்னுடைய முன்னேற்றத்தை உங்களிடமே ஒப்படைத்துள்ளது. நீங்கள் பாடசாலையில் இருந்து வெளியே வரும் போது நாட்டின் வளர்ச்சியில் பங்கெடுக்கக்கூடிய ஒரு நற்பிரஜையாகத்தான் வெளியே வரவேண்டும் என உங்களை வளர்க்கின்ற தாய்நாடு விரும்புகின்றது.

ஆனால் நீங்களோ நாட்டின் வளர்ச்சியில் குறுக்கிடுபவர்களாக மாறிக் கொண்டு வருகிறீர்கள். பலவிதமான தீயநடத்தைகளுக்கு அடிமைகளாகிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் பலத்தை எண்ணாமல் பலவீனத்தை எண்ணி அழிவுப்பாதையை நோக்கி கொண்டிருக்கிறீர்கள். இதற்கெல்லாம் காரணம் உங்கள் மனதில் தன்னம்பிக்கை என்பது இல்லாமல் இருப்பதே".

உங்களுக்கு உங்கள் மீது முதலில் நம்பிக்கை வரவேண்டும். இந்த தீய பழக்கங்களை நான் தொடமாட்டேன். எனது குடும்பத்திற்கும் எனது தாய் நாட்டிற்கும் விசுவாசமுள்ள ஒரு பிரஜையாக நான் மாறுவேன் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வர வேண்டும். இதனை விளக்குவதற்கு ஒரு சிறு கதையை கூறுகின்றேன்.

ஒருமுறை ஒரு நிருபர் ஒரு அறிஞரை பேட்டியெடுத்த போது 'இறுதியாக நீங்கள் உங்கள் நண்பராக ஏற்றுக் கொண்டவர் யார்?' எனக் கேட்டாராம். அதற்கு அந்த அறிஞர் 'ஒரு திருடனை' என்றாராம். இதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு 'ஏன்' என்று அந்த நிருபர் கேட்டாராம். அதற்கு அந்த அறிஞர் 'அந்த திருடனின் தன்னம்பிக்கையை கண்டே அவனோடு நண்பராக மாற வேண்டும்' என யோசித்தேன் என்றும் அந்த அறிஞர் பதிலளித்தாராம்.

அதாவது ஒருமுறை அத்திருடன் திருடச்சென்று விட்டு திரும்பி வரும் போது ஓரளவு தளர்வுடன் வந்தான். 'நான் அவனை ஏன் இவ்வாறு இருக்கின்றாய்' எனக் கேட்டபோது, 'நான் நினைத்த பொருள் இன்று கிடைக்கவில்லை என்றாலும் ஒரு கிழமைக்குள் எடுத்து விடுவேன்' எனக் கூறினான். ஒரு கிழமைக்குப் பின்னும் நான் கேட்டபோது 'ஒரு மாதத்துக்குள் எடுத்து விடுவேன்' எனக் கூறினான். 'எனக்கு அவனிடம் பிடித்ததே இந்த நம்பிக்கை தான்' என அந்த அறிஞர் பேட்டி கொடுத்தாராம். சாதாரண திருடனுக்கு உள்ள தன்னம்பிக்கை கூட இன்றைய இளைய சமுதாயத்தினரிடம் இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்றது.

ஆனால் இந்த நிலையை நீங்கள் நினைத்தால் மாற்றிவிட முடியும். ஒவ்வொரு நிமிடமும் நான் சாதிக்க வேண்டும் என நினைப்பவன் வெகு விரைவில் தனது இலட்சியப்பாதையை அடைந்து விடுவான். நீங்கள் தன்னம்பிக்கை உள்ளவராக மாறினால் உங்களை சூழவுள்ளவர்களையும் திருத்தும் வல்லமை உங்களுக்கு வந்துவிடும்.

நீங்கள் எந்தச் சூழ்நிலையிலும் உங்கள் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள். ஏனென்றால் எப்போது உங்களுக்கு உங்கள் மீதுள்ள நம்பிக்கை குறைகின்றதோ அடுத்த நிமிடம் தீயபழக்கங்கள் உங்களை நெருங்கிவிடும். எனவே ஒவ்வொரு இளைஞனும் தனது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் தனது வாழ்வின் ஒவ்வொரு வெற்றிப்படியாக எண்ணி அதன் உச்சியை அடைய முயற்சிக்க வேண்டும்.

"தன்னம்பிக்கையே உங்கள் பலம்"

ம.மதுஷா,
11 C
யா/மெதடிஸ்த பெ.உ.பாடசாலை

நல்ல விடயங்களை நம் மனதில் உள்வாங்கி அவற்றை நம்மிடமே நிலை பெற்றிருக்கச் செய்வதுதான் நற்பண்பாகும்.

-அரிஸ்ரோட்டில்-

# சுதந்திர தாகம்




"மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான் - ஆனால்
அவன் எங்கும் விலங்கிடப்பட்டுள்ளான்" (ரூசோ)

மனிதன் மாண்புடையவன். உண்மையில் மனிதன் நடமாடும் இறைவனின் சாயல். எனவே இறைவனால் படைக்கப்பட்ட மனிதனுக்கு இப் பூமியிலே வாழ்வதற்கு முழுச் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் இன்று மனிதனுடைய சுதந்திரம் மறுக்கப்பட்டு மறைக்கப்படு வதை நாம் பார்க்கின்றோம்.

அண்மையிலே ஒரு மிருகக்காட்சி சாலை ஒன்றிற்கு சென்றிருந் தோம். அங்கு பல்வேறுபட்ட காட்டு விலங்குகளும், பறவைகளும், ஊர்வன அனைத்தும் கூண்டுகளிலே அடைக்கப்பட்டு கிடந்தன. அப்பொழுது என் மனம் இந்த உயிர்கள் செய்த குற்றமென்ன? இவைகள் சுதந்திரமாக ஓடி, பாடி, பறந்து திரிய வேண்டியவை. ஏன் இந்த 'சிறைத்தண்டனை' என்று எனக்குள்ளே எழுந்தன கேள்விகள், ஆனால் இப்போது நினைக்கின்ற போது இன்று மனிதன் தன் சக மனிதனையும் சிறைப்படுத்தி அடிமைப்படுத்தி கம்பி கூண்டுகளிலே அடைத்து மகிழ்கின்றான். விலங்குகளுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் என்ன?

இன்று இனத்தின் பெயரால், சாதியின் பெயரால், மொழியின் பெயரால் மக்களை கூறுபடுத்தி சிந்தனையை மழுங்கடித்து மிருகங்களை விட கேவலமாக மனிதன் நடத்தப்படுகின்றான். மனிதனுடைய மனித மாண்பும் சுதந்திரமும் மறுக்கப்படுகின்றது. பொருளாதாரமும் மனிதனை சின்னாபின்னமாக்கின்றது. மனிதன் சுதந்திரம் இல்லாத நிலையில் சுதந்திரத்திற்காக போராடிக்கொண்டிருக்கின்றான்.

"எங்கள் விலங்குகள் கழற்றப்படவில்லை
சாவிகள் தாம் கைமாறியுள்ளன....."

"இரவில் வாங்கினோம் சுதந்திரம்
இன்னும் விடியலே இல்லை" என்று புதுக்கவிஞன் பாடுகின்றான்.

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்" என்று பாரதியார்

பாடினார். மனிதன் சுதந்திர தாகம் அவன் கருவறையில் உருவான நாளிலிருந்தே உருவாகி கல்லறை வரை அவனை தொடர வேண்டும். ஆனால் கருவறையில் வளருகின்ற குழந்தைக்கும் சுதந்திரம் கிடைக்கின்றதா? இல்லை, குழந்தை ஏதோ ஒரு விதத்தில் பாதிப்பை அடைகின்றது. எல்லையற்ற ஆசைகள், சிசுக்கொலை, சமூகச் சீர்கேடு, கலாசாரப் பிறழ்வுகள், போர் என்பன சுதந்திரத்தை பாதிக்கின்றன.

எப்போது மனிதன் "நானும் மனிதன் தான்" என்று உணர்கின்றானோ அப்போது சுதந்திரத்தின் பண்புகள் மலர்கின்றதை அவதானிக்கலாம். சுதந்திரம் இருக்கின்றது என்பதற்காக ஒருவன் "எதையும் செய்ய எனக்கு உரிமை உண்டு" என தன் போக்கில் நடந்து கொள்ள முடியாது. அளவுக்கு அதிகமான தனிச் சுதந்திரம் மனிதனை துஷ்பிரயோகத்துக்கு இட்டுச்செல்ல வழிபிறந்துவிடும். எனவே சுதந்திரத்தை பொறுப்புணர்வோடு செயல்படுத்த வேண்டும். ஆனால் மனிதன் விலங்குகளை கொன்று உண்டான். பறவைகளை கொன்று சாப்பிட்டான். இப்போ மனிதன் மனிதனையே கொன்று சாப்பிடுமளவுக்கு மாறிக் கொண்டிருக்கின்றான். காரணம் பதவி, ஆசை, 'நான்' என்ற தலைக்கனம், ஆணவம், பணம் போன்ற செயற்பாடுகளேயாகும்.

சுதந்திர தாகம் மனிதனிலே வாழப்பட வேண்டுமென்றால் அவன் உள்ளத்திலே சுதந்திரம் உதயமாக வேண்டும். எப்போது மனிதனின் அக உள்ளத்திலே இருக்கின்ற பகை, வெறுப்பு, கோபம், வர்மம், சண்டை, பயம், வைராக்கியம், தாழ்வுமனம், கவலை , குற்ற உணர்வு , பேராசை, ஆடம்பரம் , பணம், பதவி, தலைக்கனம், ஆணவம் போன்றவற்றில் இருந்து விடுதலை பெற்று மன அமைதியிலே நிம்மதியோடு வாழுகின்ற போது சுதந்திரமாக வாழ முடியும். சுதந்திர விடுதலை இன்று முதலில் நமக்குள் உருவாகி, அதன் பின் சகோதரன், சமூகம், நாடு, உலகனைத்தையும் மாற்ற முடியும். அகச் சுதந்திரத்தை பெறாமல் புறச் சுதந்திரத்தை அடைய முடியாது,

எனவே சுதந்திரத்தை பொறுப்புணர்வுடன் செயல்படுத்துவோம். அடுத்தவனின் உரிமைகளை மதிக்கும், மனப்பான்மையை பேணுவோம். அன்புப்பணி செய்வோருக்கு ஏழ்மை சுதந்திரம் கிடைப்பதை போன்று அன்பு பணி செய்ய முற்படுவோம். மனிதனின் மாண்பு மறுக்கப்படுகின்ற போது உரிமைக்காய் குரல் கொடுக்க முன்வருவோம். மனித உள்ளத்திலே சுதந்திர விதையை விதைக்க முற்படுவோம்.

**-தி.யெனிஸ்ரன் பெனடிற் -**

# உழவரின் உழைப்பு உன்னதமானது



பண்ணை தந்த நிலத்தினிலே
பாடுபட்டு உழைத்து நிதம்
பண்படச் செய்த உழவர்க்கு - ஒரு
பானைச் சோற்றுக்கு அரசியில்லை.

உலகம் வாழ உழைத்திடுவீர்
உம்மைக் கொடுத்து உயர்த்திடுவீர்
உடலைப் பிளிந்த உம்பசியை
உலகம மறந்து போயிடுதே......

சும்மா இரந்து பேசிடுவர்
சுற்றம் பற்றி இழித்திடுவர்
உம்மை மறந்த இவருக்கும்
உண்ண உணவு கொடுக்கிறீரே....?

கந்துவெட்டி பெயரிருக்கு
காணிவளம் நிறைந்திருக்கு
மந்திபோல மனமிருக்கு
மற்றவை மறந்திருக்க....

வியர்வை சிந்தி நீர் உழைக்க
வீணாய் செலவு செய்திடுவர்
குடிசைக்குள்ளே நீர் வாழ - தாம்
கோபுர வீடு கட்டிடுவார்.

உம் உழைப்பைச் சுரண்டும் இவருக்கு
உண்மை புகட்ட வேண்டாமா
விழித்து எழுந்து வந்திடுவீர் - அடிமைத்
தனத்தை அழித்து வென்றிடுவீர்.


உம்மை என்றும் போற்றிடுவோம்
உழவர் வாழ எண்ணிடுவோம்
உயர்த்தி உம்மை வாழ்த்திடுவோம்
உள்ளம் நெகிழ்ந்து அன்பு செய்திடுவோம்.

**அ. கயல்விழி**
இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

தனது குடும்பத்தில் உள்ளோரிடம் அன்புடன் பழகி வாழ்பவன்தான் நாட்டு மக்களுக்கு அமைதியைப் பற்றிக் கூறத் தகுதியுடையவன் ஆவான்.

-கன்ஃபூசியஸ்-

# அஞ்சலியக மாலை நேரக்கல்வி.....



இன்று 245 பிள்ளைகளை தாங்கி கல்வி பயிற்றுவிக்கும் 'டி மசனட் கல்வி நிறுவனம்' ஆரம்பித்த விதம் எங்களில் பலருக்கு தெரியாமல் இருப்பதில் வியப்பேதுமில்லை. 2006ம் ஆண்டு மாசி மாதம் 10ம் திகதி தும்பளை கிராமப் பகுதியில் தென்றலாக வந்துதித்த அஞ்சலியகத்தின் இயக்குனர் அருட்தந்தை டேமியன் அவர்கள் இந்த கிராமத்தின் வளங்களைப் பார்வையிட்டார். இங்கே கல்விமான்கள், உத்தியோகத்தர்கள் சமயப் பெரியார்கள் இருந்தாலும் பெரும்பாலான குடும்பங்கள் அன்றாடத் தொழில் புரிபவர்களாகவே இருந்தார்கள்.

அன்றாடம் உழைத்துவரும் வருவாயில் இருந்து பிள்ளைகளுக்கு தேவையான உணவு, உடை, மருத்துவம், பாடசாலை செலவு என அனைத்தையும் நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் ஒவ்வொரு குடும்பமும் கஷ்ரப்படுவதையும், பெற்றோரை இழந்த குழந்தைகளும் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களின் நிலைகளையும் அறிந்து இச் சிறுவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணியே மாலைநேரக் கல்வியை ஆரம்பிக்க தீர்மானித்த போது கல்வி கற்பிப்பதற்கு வேண்டிய இடவசதி கிடைக்கவில்லை. இவ்வேளை அதே ஊரில் வசித்துவரும் அதிபர் திரு.புஸ்பராசா அவர்களிடம் ஒரு வீடு இருப்பதை அறிந்து அவரிடம் அதைக்கேட்ட போது தாராள மனதுடன் மாணவர்கள் கல்வி பயில்வதற்கு தந்து உதவி செய்தார்.

இவ்வாறான நல்ல உள்ளங்களை பாராட்டாமல் இருக்க முடியாது. ஏனெனில் இடம் தர மறுத்திருந்தால் 245 மாணவர்களின் மாலைநேரக் கல்வி கேள்விக்குறியாகவே மாறியிருக்கும். இடம் கிடைத்ததும் 2006ம் ஆண்டு கார்த்திகை 20ம் திகதி மாலை நேரக்கல்வி ஆரம்பித்து மாணவர்கள் கல்வி கற்க தொடங்கினார்கள். கல்வி பயின்ற மாணவர்களை கவனித்த ஆசிரியர்கள் அநேகம் பிள்ளைகள் சோர்வுடன் உள்ளதை அவதானித்து அதை தெரியப்படுத்தியபோது என்ன செய்யலாம் என சிந்தித்து கல்வியோடு சத்துணவும் வழங்க தீர்மானித்து வாரத்தில் 2 நாட்கள் சத்துணவும் வழங்கப்பட்டு வருவதோடு மேலதிகமாக ஒருநாள் பாலும் வழங்கப்படுகிறது.

இத்தோடு மட்டும் நின்று விடாது பிள்ளைகளிடமுள்ள தனித்திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காக அவர்களின்

திறைமைகளுக்கேற்ப இசை, நடனம், யோகாப் பயிற்சி, பஜனை, தியானம் என்பவற்றிற்கான பிரத்தியேக வகுப்புக்களும் அதற்குரிய வள ஆசிரியர்களினால் பயிற்றப்படுகின்றது. இக் கல்வி நிலையத்தில் தரம் 1இல் இருந்து தரம் 11 வரையான மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். இவர்களுக்கு முக்கிய பாடமான கணிதம், ஆங்கிலம், தமிழ் உட்பட 5 பாடங்களும் நன்கு பயிற்றப்பட்ட பட்டதாரி, உயர்தரம் கற்ற 20 ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுவதோடும் க.பொ.த சாதாரண தரத்திற்கும் தரம் 5 புலமைப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குமான மேலதிக பரீட்சை ஆயத்த வகுப்புக்களும் இடம்பெறுகின்றன. சென்ற ஆண்டு புலமைப்பரீட்சையில் 22 மாணவர்கள் தோற்றினார்கள். இதில் 2பேர் சித்தியடைந்ததோடு 12 பேர் 100 க்கு கூடிய புள்ளிகளைப் பெற்றார். சென்ற வருடம் க.பொ.த.சாதாரண தரத்துக்கு தோற்றிய 15 மாணவர்களில் 13 பேர் சித்தியடைந்து க.பொ.த.உயர்தரத்துக்கு சென்றுள்ளார்கள்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் அநேகமானோர் வறுமையில் உள்ளவர்களே ஆரம்பத்தில் இக்கிராமத்தில் இருந்து மாத்திரமே வந்த மாணவர்கள் இப்பொழுது அயல் கிராமங்களில் இருந்தும் வருகிறார்கள். இவர்களை ஒரு குழுவாக்கி அவர்களின் திறமைகளுக்கு வலுச்சேர்க்கும் முகமாக "அஞ்சலிப் பூக்கள்" என்னும் பெயரிட்டு சிறுவர் கழகம் ஆரம்பித்து அவர்களாகவே தலைமை ஏற்று மாதத்தில் ஒருநாள் ஒன்று கூடி தமது திறன்களை நாடகம், கவிதை, பாடல், சிந்தனை நகைச்சுவை, ஆங்கிலப்பாடல், ஆங்கிலக் கவிதை என்பவற்றின் ஊடாக வெளிப்படுத்தி வருகின்றார்கள். அத்தோடு மட்டுமல்லாது இவர்களில் பலர் வெளி இடங்களுக்கு செல்லாதவர்கள். எனவே இவர்களை வெளி இடங்களுக்கு அழைத்துச் சென்று இடங்கள் பார்ப்பதோடு அங்குள்ள சிறார்களுடனான நல்லுறவை வளர்க்கும் நோக்கில் சுற்றுலா, சகோதர மொழி பேசும் சிறார்களுடனான ஒன்றுகூடல், விசேட தினங்களின் போது வேறு இடங்களிலுள்ள சிறார்களை சந்தித்து அவர்களுடனான நல்லுறவை கட்டி எழுப்பல் போன்ற செயற்பாடுகளும் இடம் பெறுகின்றன.

எமது கல்வியின் நோக்கமானது ஒவ்வொரு சிறார்களும் ஒழுக்கத்திலும், அன்பிலும், கல்வியிலும் சிறந்து, எதிர்காலத்தில் இவர்கள் ஒரு நற்பிரஜையாக வாழவேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

**K.ராணி**
உளசமூகப் பணியாளர்,
அஞ்சலியகம்.

# "மாற்றியது நீயே....."



## [சிறுகதை]

அன்று அந்தக் கிராமமோ அமைதியாக இருந்தது. தெருவின் இருமருங்கிலும் தென்னோலைகளும் தோரணங்களும் கட்டப் பட்டிருந்தன. இளைஞர் குழாம் ஒன்று மதிற்சுவர்கள் கடைகள் என அந்தக் கண்ணீர் அஞ்சலியை ஒட்டிக் கொண்டிருந்தனர். அவர்களின் முகங்களிலும் சோகத்தின் நிழல் பரவியிருந்தது. அந்தக் கிராமத்திற்கு மின்சாரம் வந்த நாளிலிருந்து பாட்டுச் சத்தத்திற்கு குறைவேயில்லை. காதும், நெஞ்சும் வெடித்துவிடுமளவிற்கு தொம், தொம் என பொக்சின் சத்தம் நோயாளர் அல்லாதவர்களைக் கூட மன நோயாளிகளாக்கிவிடும். குப்பி விளக்கிலும் கூட அமைதியாகவும் சந்தோஷமாகவும் இருந்த ஊர் இப்ப ஒவ்வொரு வீட்டிலும் பாட்டும் கும்மாளமும் ரீவியும்தான். இதனால் அவ்வூர் மக்களின் கல்வி பாதிக்கப்படுகிறது என்பதைச் சிந்திப்பதற்குக் கூட அவர்களுக்கு நேரமில்லை என்றாலும் ஒரு நன்மை வம்பளக்கும் பெண்கள் கூட்டம் இப்போது ரீவி நாடக விமர்சனத்தில் ஆழ்ந்ததுதான். ஆனால் இன்று மட்டுமே அதற்கெல்லாம் ஓய்வு கொடுக்கப்பட்டிருந்தது. கூலி வேலை செய்பவர்கள் கூட அன்று விடுதலை. அது அந்த ஊரின் வழமையாகியிருந்தது. முன்பெல்லாம் மரண வீடென்றால் ஒப்பாரியின் சத்தம் அந்த ஊரின் எல்லை வரை கேட்கும். அதுமட்டுமல்ல ஒப்பாரியின் வரிகள் தெருவால் போகிறவர் களைக் கூடக் கண்ணீர் சிந்த வைக்கும். இன்று ஒப்பாரி சொல்ல ஆளைப் பிடிக்க வேண்டியதாயிருக்கிறது. ஓலைப்பாயில் குந்தியிருக்கும் காலம் போய் நாகரீகமாகக் கதிரையில் அமர்ந்து சம்பாசிக்கும் காலம் வந்துவிட்டது. தொழில்நுட்ப மாற்றத்திற்கேற்ப மனுசரும் மாறி விட்டனர். ஆனாலும் இறந்தவரின் உடலை ஊரின் எல்லைவரையாவது தோளில் சுமந்தே எல்லையில் நிற்கும் காரில் ஏத்துவதும் வழமையான தொன்றாக இருந்தது.

முற்றத்தின் ஒரு கோடியிலே இருந்த அந்த மாமரத்தின் நிழலிலே பச்சைத் தென்னோலையால் பன்னாங்கு செய்ய மற்றவர்கள் அந்தப் பாடையை ரிசுக்களினால் சோடித்துக் கொண்டிருந்தனர். கமலம் மாமி மட்டும் ஒவ்வொருவராகக் கட்டிப்பிடித்து 15 வருடங்களுக்கு முன்பு

இறந்த தன் கணவனை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தாள். அதுவும் ஒரு சம்பிரதாயமாகப் போய்விட்டது. இறந்தவரின் பிரிவை நினைத்து யார் அழுகிறார்கள். தங்கள் கவலைகளைத் தீர்ப்பதற்கு மரண வீட்டை எதிர்பார்ப்பவர்கள் கூட இருக்கிறார்கள். ஒரு புறத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின் சந்தித்த உறவினரின் கலந்துரையாடல் இன்னோர் புறத்தில் இறந்த மோகனின் சுயசரிதை. இன்னொரு திசையில் மோகனின் மனைவி திவ்யாவைப் பற்றிய ஆய்வுகளும் நடந்து கொண்டிருந்தது. கொப்பியும் கையுமாக செலவுகளைப் பட்டியல் படுத்திக் கொண்டிருந்தார் கந்தசாமி அண்ணை. செலவுகளை வாசிகசாலை பொறுப்பெடுத்திருந்தது. “என்ன சின்னம்மா அதுகள் சிறுசுகள் அதுகளுக்கென்ன தெரியும். இதுகளை நீங்கள் சொல்லிக் குடுக்கக் கூடாதே. அந்தக் கட்டிலுக்குக் கீழை ஒரு பாத்திரத்தில் தண்ணி வைச்சு விடுங்கோ. அந்தா அந்தக் குத்து விளக்கு அணையப் போகுது. தம்பி... சின்னவன் பந்தம் சுத்தியாச்சே. கெதியில சுத்தி எண்ணெயில ஊற விடுங்கோ. நேரம் தப்பினால் திதி சரியில்லை.” சம்பிரதாயங்களை நினைவூட்டினார். அப்போது தான் வந்திறங்கிய பரமு மாமா “ம்....... வந்திட்டார் நியாயம் சொல்ல...... மருமகனில சரியான பாசம் தான். அதுதான் நேற்றறிவிச்ச இழவுக்கு இப்ப வந்து குதிச்சிருக்கிறார்” முணுமுணுத்தபடியே விறுக்கென எழுந்து போனாள் சின்னம்மா.

“பிள்ளை.... திவ்யா..... இந்தா.... இந்தத் தேத்தண்ணியையாவது குடி” சுடுதண்ணிப் போத்தலில் வாத்து நீட்டிய தங்கத்தை “தங்கம் இஞ்ச வா, நடிக்காமல் அங்கை போய் உன்ரை வேலையைப் பார். அவள் என்ன அழுது களைச்சிருக்கிறாளே.” இரகசியமாகச் சொல்வது போல திவ்யாவின் காதுகளில் கேட்க வேணுமெண்டே சொன்னாள் கமலம் மாமி. திவ்யாவிற்கோ நெஞ்சுக்குள் பரவிய துக்கம் ஒன்று திரண்டு தொண்டைக்குள் பந்தாக அடைத்தது. தொண்டைக்குழி வந்த வார்த்தைகளை அப்பிடியே விழுங்கிக் கொண்டாள். தான் வாய் திறந்தால் நிச்சயம் முத்து உதிராது என்பது அவளுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் அவள் கண்களிலிருந்து ஒரு துளி கண்ணீர் கூட வரவில்லை. ஒவ்வொருவராக அவளை கட்டிப்பிடித்துக் கதறினார்கள். அவள் மட்டும் மரம் போல அசையாமல் இருந்தாள். “கல்லானாலும் கணவனல்லே” கமலம் மாமி சொல்வது நன்றாகவே கேட்டது. அவளின் உருகும் மனமும் கல்லாய் போய் பத்து வருடங்களாகி விட்டனவே. அவளின் நினைவுகள் முன் நோக்கிச் சென்றது.

பாடசாலை நாட்களிலே 'கெட்டிக்காரி' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டவள் திவ்யா. ஆசிரியர்களைக் கேள்வி கேட்டு அவர்களைத் திக்குமுக்காடச் செய்வது அவளின் கை வந்த கலையாகும். விடை கூற முடியாமல் மற்றைய ஆசிரியர்களிடம் ஓட வைத்த சந்தர்ப்பங்களும் உண்டு. இருப்பினும் மனுசரால் முடியாத காரியங்களும் இருக்கத்தானே செய்கிறது. அவளின் முயற்சி விதியால் மாறியது பல்கலைக்கழகம் எட்டாக் கனியாகியது. இப்படியே அவளின் காலம் உருண்டோடி இருபது வயதை எட்டினாள். அழகி என்று சொல்லப்பட்டாலும் எந்த ஒரு ஆண் பார்த்தாலும் மயங்கி விடும் ஒரு தனித்துவம் அவளிடம் இருந்தது. எத்தனையோ ஆண்கள் "ஐ லவ் யூ" சொன்ன போதும் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கொள்கையில் அத்தனையையும் தட்டிக் கழித்தாள். பெற்றோரின் விருப்பத்தின்படியே திருமணம் செய்ய வேண்டும் என்பது தாய் பூரணம் ஊட்டி வளர்த்த கொள்கை. தந்தை சிறுவயதில் இழந்தாலோ என்னவோ தன் சுமையைக் குறைக்க எண்ணி அப்பொழுதே திருமணம் பேசும் படலத்தை ஆரம்பித்தாள் பூரணம். அப்படலத்திலே மோகன் சிக்கிக் கொண்டான். "நல்ல இடம் நழுவ விட்டிடாதை" கமலம் மாமி நான்கு வேளையும் வேதம் ஓதத் தொடங்கினார். 'இளவயதுத் திருமணம் உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் பாதிக்கும்' என எவ்வளவோ கூறிய போதும் பூரணம் கேட்க தயாராக இருக்கவில்லை. இறுதியில் பூரணத்துக்கே வெற்றி கிடைத்தது.

மோகனின் அன்பிலே உண்மையிலேயே திவ்யா மயங்கிவிட்டாள். தான் கொடுத்து வைத்தவள் என்று எண்ணுமளவிற்கு அவனின் ஒவ்வொரு வார்த்தையும் அவளைக் கிறங்க வைத்தது. திருமணமான புதிதில் எல்லா ஆண்களும் இப்படித்தான் ஆசை மொழி பேசுவார்கள் என்பதை அறியாதிருந்தாள். அதன் விளைவு நான்கு வருடத்தில் மூன்று பெண் குழந்தைகளின் தாயானாள். சனீஸ்வரனின் பார்வை பட்டதோ என்னவோ நாளாக ஆக நேரம் பிந்திவரத் தொடங்கினான். மோகன் காரணம் கேட்கும் போதெல்லாம் ஏதோ ஒரு சாட்டை வைத்துக் கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தால் போதும் வீட்டு வேலைகளை முடிப்பதே பெரும்பாடாக இருக்கும். பிள்ளைகளின் வேலைவேறு. கடைக்குட்டியை நித்திரையாக்கி ஏணையில் படுத்தியபின் உடைகளைத் தோய்த்துவிட்டு அப்பொழுதுதான் களைத்து வந்து கதிரையில் சாய்ந்தாள் திவ்யா. கமலம் மாமி வருவதைக் கண்டதும் நெஞ்சு திக்கென்றது. நேற்றிரவுதான் கமலம்

மாமியைப் பற்றி மோகன் சொன்னான். “திவ்வி..... கமலம் மாமிக்கு மனுசனுமில்லை. பிள்ளையளை வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டு ஊர் வம்பளக்கிறதுதான் அவவுக்கு வேலை. அவ ஒரு ஒரு வீட்டை போனால் அது கலகத்தில் தான் முடியும்” மோகன் சொன்னது நினைவிருந்த போதும் என்ன செய்யிறது வீட்டுக்கு வாறவாவை துரத்தி விட முடியுமே. “வாங்கோ மாமி” கதிரையை எடுத்துப் போட்டாள் திவ்யா. “வேண்டாம் பிள்ளை.... இந்த மண் தானே கடைசியில எங்களுக்குச் சொந்தம்” காலால் சீய்த்து விட்டு நிலத்தில் அமர்ந்தார் கமலம் மாமி. “மாமி...... நீங்கள் கீழை இருக்க நான் கதிரையில இருக்கிறதே” திவ்யாவும் நிலத்தில் அமர்ந்தாள். “இப்பத்தைப் பிள்ளையள் இப்பிடி நினைக்குதுகளே.... தகப்பன் கீழை இருக்க பிள்ளையள் காலுக்கு மேலை காலைப் போட்டுக் கொண்டு இருக்குதுகள்....”. “அதுகளுக்கு நாங்கள் தானை மாமி சொல்லிக் குடுக்க வேணும்.” சப்போர்ட் பண்ணினாள் திவ்யா. அங்கை இங்கை தொட்டுக் கடைசியில் மோகனில் வந்து நின்றது. “பிள்ளை நேற்று உன்ரை மோகன்..... அவள் சுஜாதாவை மோட்டார் சைக்கிளில ஏத்திப் போகக் கண்டனான்”..........

(தொடரும்)

திருமதி. ஆனந்தகிளி தேவகுமார்
பருத்தித்துறை.

# வாழ்க்கை

- பூவொன்று மலர்ந்து விட்டால் ஓர்நாள் உதிர்ந்துதான் ஆகவேண்டும். இதுபோலவே உலக வாழ்க்கையும்.
- இவ்வுலகில் உன் கதாபாத்திரம் என்று முடிவடைகிறதோ. அன்று உன் விதியும் முடிவடைந்து விடும்.
- வாழ்வில் முதல் முதலாக என்று தோல்வியை அடைகிறாயோ! அன்றே உன் வெற்றி ஆரம்பமாகிறது.
- வாழ்வில் தவறு விடலாம் அதற்காக வாழ்வைத் தவறவிடாதே!
- இறுதி வரியானாலும் இறுதி வரைக்கும் மறந்து விடாதே.

சி.தனுஜா
தரம் - 9
யா/இமையாணன் அ.த.க.வித்தியாலகம்

# அறிவுத் துளிகள்

❖ இலங்கையில் 1985ஆம் ஆண்டில் தேசிய இளைஞர் வருடம் ஆரம்பிக்கப்பட்டு 2010ம் ஆண்டில் 25 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஒகஸ்ற் 2010-2011 ஐ சர்வதேச இளைஞர் வருடமாகப் பிரகடனப்படுத்தியதுடன் இந்நிகழ்வின் தொனிப்பொருளாக உரையாடலும் பரஸ்பர புரிந்துணர்வும் விளங்குகின்றது.

❖ இலங்கையின் புதிய துறைமுகம் - 'மகிந்தராஜபக்ஷ' துறைமுகம் இது 2010-11-18 இல் திறக்கப்பட்டது. அம்பாந்தோட்டை மாறகம்புரவில் அமைந்துள்ளது. இத்துறைமுகத்திற்கு 'ஜெட்லைனர்' எனும் கப்பல் முதன் முறையாக பிரவேசித்தது.

❖ இலங்கையில் அமையவுள்ள எதிர்கால நகரங்கள்.

1) துறைமுகநகரம் - அம்பாந்தோட்டை
2) முதற்தர நகரம் - கொழும்பு
3) விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக நகரம் - தம்புள்ள
4) மரபுரிமை நகரங்கள் - அநுராதபுரம் , பொலநறுவை
5) வித்தியாசமான கலாசார நகரம் - யாழ்ப்பாணம்
6) கைத்தொழில் நகரம் - திருகோணமலை

❖ 1990ம் ஆண்டில் வணக்கத்துக்குரிய தோமஸ் பெஞ்ஜமின் குரே ஆண்டகை இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது கர்தினால் ஆவார். 2010.10.20 இல் பாப்பரசர் 16ம் ஆசிர்வாதிப்பரினால் கொழும்பு பேராயர் பேரருட் திரு.மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இலங்கையின் இரண்டாவது கர்த்தினாலாக நியமித்தார்.

❖ முதலாவது அதிவேக ரயில் 2011-02-16 இல் ஆரம்பிக்கப்பட்டது. காலி மாத்தறைக்கு இடையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நிர்மாணப் பணிகளுக்கு இந்திய அரசு நிதி உதவி வழங்கியதுடன் IRCON நிறுவனமும் இணைந்து செயற்படுகின்றது.

❖ தீரம் மிக்க சர்வதேச மகளிர்விருது பெற்றவர் ஜன்சிலா மஜீத் (இலங்கை) 2010 மார்ச்சில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரிகிளிண்டனால் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

❖ 2010 டிசம்பரில் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயக்குற்றி 5000 ரூபா பெறுமதியான நாணயக் குற்றியாகும். இலங்கை மத்திய வங்கியின் 60வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதத்தில் வெளியிடப்பட்டது. முதலாவது பலவர்ண நாணயக் குற்றியாகும். இந்நாணயக் குற்றியின் சந்தைப் பெறுமதி ரூ.7000 ஆகும்.

❖ இலங்கை நாணயத்தாள்கள் அச்சிடும் கடதாசிகள் கொள்வனவு செய்யும் இடம் - போடல்ஸ் நிறுவனம் (இங்கிலாந்து)

❖ இலங்கை கிரிக்கட் அணியின் "மாஸ்டர் பெட்ஸ்மன்" எனப்படுபவர் சனத் ஜயசூரிய.

❖ முதலாவது இளையோர் ஒலிம்பிக் 14.08.2010 அன்று சிங்கப்பூரில் ஆரம்பமானது. 26 வகை விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. 3600 வீரவீராங்கனைகள் பங்குபற்றினர். அடுத்த போட்டிகள் 2014ம் ஆண்டு சீனாவில் நன்ஜிங் நகரில் நடைபெறவுள்ளன.

❖ முதலாவது இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் சிங்கப்பூர் மெரினா மிதக்கும் அரங்கிலேயே நடைபெற்றன.

**ஆ.தர்சினி**
தும்பளை

# ஒழுக்கமே உயிர்




"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார் வள்ளுவர். வாழ்வின் சிறப்பு ஒழுக்கமாகும். மனிதன் முக்கியமாகக் கருதிக் காப்பது உயிராகும். ஒருவர் உயர்நிலை அடைய ஒழுக்கம் தேவை. எனவே ஒழுக்கம் உயிரை விட சிறந்ததாகப் போற்றப்படும். ஒழுக்கமற்றவன் உயிரற்ற உடலை உடையவனாகக் கருதப்படுகின்றான்.

கற்ற கல்வியை மறந்தால் மீண்டும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் கெட்டால் மீண்டும் பெறமுடியாது. எவ்வளவு நூல்களைக் கற்றாலும் ஒழுக்கத்தைக் கல்லாதவர் அறிவில்லாதவர்களே ஆவர். பொறாமை இல்லாத குணத்தை ஒழுக்கமாகவே கொள்ள வேண்டும். பொறாமைக்குணம் பாவச் செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. பொறாமைக் குணம் உள்ளவரிடம் செல்வம் நிலைத்து நிற்காது. இவர்களிடம் திருமகள் இருப்பதில்லை.

"தொட்டில் பழக்கம் சுடுகாடுவரை" என்பது பழமொழி. குழந்தைகளாக இருக்கும் போது ஏற்படும் குணங்கள் தான் கடைசிவரை நிலைத்துநிற்கும். பாடசாலையில் பணக்காரர், ஏழை எல்லோருடைய குழந்தைகளும் சேர்ந்து படிக்கின்றார்கள். பணக்காரனின் குழந்தைகளைப் பார்த்து மற்றக் குழந்தைகள் பொறாமை கொள்ளலாகாது. தன்னைவிட ஏழ்மைநிலையில் உள்ள பிள்ளைகளைப் பார்த்து இரக்கப்பட வேண்டும். தான் நல்ல நிலையில் இருப்பது குறித்து மகிழ்ச்சியடைய வேண்டும்.

புறம் பேசாதிருத்தலும் சிறந்த ஒழுக்கமாகும். ஒருவரது குற்றத்தை அவருக்கு முன்னால் எடுத்துச் சொல்வது குற்றமாகாது. ஆனால் அவர் இல்லாதபோது அதை மிகைப்படுத்திக் கூறுவது பாவச்செயலாகும். பிறர் குற்றத்தைச் சொல்வதற்கு முன்பு தனது குற்றத்தை அதிகப்படுத்தி மற்றவர் கூறினால் என்ன செய்வது என்று அஞ்ச வேண்டும். மற்றவர்களிடம் உள்ள சிறந்த குணங்களை பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதனால் மகிழ்ச்சியடைய வேண்டும்.

பெரியோரைப் போற்றி பணிந்து நடத்தலும் ஒழுக்கமேயாகும். ஆற்றல் மிகுந்த பெரியோரை விரும்பி மதிக்காமல் நடந்தால் அது அப் பெரியோரால் நீங்காத துன்பத்தைத் தருவதாகும். அன்னை தந்தையிடம் அன்பாய், பணிவாய் நடப்பது போல் பெரியோர்களிடத்தும் ஆசிரியர்களிடத்தும் தவறு செய்யாமல் ஒழுங்காக நடக்க வேண்டும். கல்வி கற்பிக்கும் ஆசிரியரை தந்தைக்குச் சமமாக நினைத்து பணிந்து நடக்க வேண்டும். ஆசிரியர் கூறுவது மாணவரின் நன்மைக்கே என்று கருத வேண்டும்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

என்று வள்ளுவர் கூறுவதனூடாக பெருமைக்குணம் உடையோர் தமக்கு சிறப்பு உண்டாகும் காலத்திலும் பிறரிடம் பணிவு காட்டுவர். ஆனால் சிறுமைக்குணம் உடையோர் தமக்கு சிறப்பு உண்டாகாத காலத்திலும் தம்மைத்தாமே பெரிதாக நினைப்பர்.

ஒழுக்கம் உடையவர்கள் எப்போதும் அடக்கமாயும் பொறுமைக் குணம் உடையவர்களாயும் இருப்பார்கள். பூமியானது தன்னை வெட்டித் தோண்டுவோரையும் தாங்கி சுமந்து நிற்கின்றது. அது போல ஒழுக்கமுடைய பெரியோர்கள் தம்மை இழிவுபடுத்துபவரது குற்றங்களையும் பொறுத்துக் கொள்வர்.

மக்கள் விழித்துக் கொண்டிருக்கும் வீட்டில் திருடர்கள் நுழைவது இல்லை. அது போல நாம் எப்பொழுதும் எச்சரிக்கை உள்ளவர்களாக இருந்தால் எமது தூய்மையைக் கொள்ளை கொள்ளக்கூடிய / ஒழுக்கத்திற்கு மாறான செயல்களைச் செய்யக்கூடிய கெட்ட எண்ணங்கள் எதுவும் எம் மனத்தில் ஏற்படமாட்டாது.

**இ. சிவரஞ்சினி**
தும்பளை

முற்காலங்களில் மாணவர்கள் தங்களுக்காக கல்வி கற்று வந்தனர்.
இன்று மாணவர்கள் பிறருக்காகக் கல்வி கற்கின்றனர்.

**-கன்ஃபூசியஸ்-**

# மாறிவரும் மானிடம்

நிலையில்லாத உலகம் தனிலே - நம்
நிஜமில்லாத உறவுகள் தாம்
நித்தம் நித்தம் மாறி வருகின்றன - இது
நிலையானதாகவே இருந்து வருகின்றது.

திடமான மானிடங்கள் எல்லாம்
தினம் தினம் மாறி வருவதனால்
தித்திக்கும் வாழ்வுதனை தினம்
தினம் இழந்து வருகின்றன.

பண்டைய காலம் தன்னில்
பல அறிஞர்கள் கூறியுள்ளனர்
காலம் தான் மாறிடினும்
மகத்தான மானிடம் மாறுகின்றது.

தொன்மை வாய்ந்த உலகம் தனில்
மானிடத்தின் பெருமை தன்னை
காண பதற்காக தன் வாழ்வுதனை
அர்ப்பணித்த மாவீரர் மத்தியில்

எம் மானிடங்கள் எல்லாம்
நிலையிழந்து அறிவிழந்து இன்று
சுகமிழந்து சுமையான வாழ்வினை
வாழ்ந்து கொண்டு இருக்கின்றது.

அந்நியன் வந்து ஆண்ட போதும்
அடிமைகளாய் இருந்த நம்மினம்
இன்று சுதந்திரமாய் இருக்கும் போது
அறிவிழந்து நடக்கும் மானிடம்.

நவ நாகரீக உலகம் தனில்
நாத்தி கரும் மாறுகின்றனர்
கற்றவரும் கல்லாதவரும் இன்று
மாறிவரும் நிலைதான் ஏனோ.

பிறந்த குழந்தைகள் என்றும்
'அம்மா' என அழைப்பதைக் கண்டு
இன்றோ 'மம்மி' என அழைத்து
தமிழை கொச்சைப்படுத்துகின்றன.

தமிழ் பண்பாட்டு உடைதான்
சேலை என்று பெருமைப்பட்டவர்கள்
இன்றோ கலாசாரம் செல்வமாம்
ஜீன்சும் ரீசேட் என்கிறார்கள்.

அன்றைய காலத்தில் வாழ்ந்தவர்கள்
ஒருத்தனுக்கு ஒருத்தி என்று வாழ்ந்தனர்
ஆனால் இன்று எம்மினங்களோ
அந்தத்துவத்தையோ கொச்சைப்படுத்தினர்.

மாறிவரும் உலகம் தனிலே
மாறிவரும் மானிடர்களாக வாழாது
மாண்புமிகு மானிடர்களாக வாழ்ந்து
மண்ணின் பெருமைதனை காத்திடுவோம்.

மானிடனே நாம் பிறந்த தன்பயன்
புதுமைகளையும் பெருமைக்கும் படைத்து
மானிடத்தின் பண்பினை உலகத்தில்
நிலை நாட்ட என்பதை உணர்ந்திடுங்கள்.

உண்மை தனை உணர்ந்து விட்டால்
உன்னை விட உலகம் தனில்
உயர்ந்த மானிடம் இல்லையென்று
பெருமையினை போர்த்துக் கொள்.

பெருமிதமாய் வாழ்ந்த மானிடம்
பெருமளவு இருக்க வேண்டின்
ஒவ்வொரு மானிடம் உள்ளம்
இன்றே நெகிழ்ந்து விடின் நன்று.

**வினோதினி**
யா/விதிரிஇருதயக் கல்லூரி,
கரவெட்டி.

# வன்முறை
## ஓர் உளவியல் நோக்கு

K.Gauthaman
Visitting Lecturer (Psychology)
Department of Philosophy
University of Jaffna.

அண்மைக்காலமாக நாளேடுகளில் வன்முறை தொடர்பான செய்திகளை அடிக்கடி அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, ஆட்கடத்தல், கோஷ்டி மோதல், பழிவாங்குதல், சீதனம் கேட்டுத் துன்புறுதல், காதலித்துக் கைவிடல், மது போதைப் பொருள் பாவித்து விட்டுத் துர்நடத்தைகளில் ஈடுபடல், பெண்கள் தனியார் கல்வி நிறுவனங்களிலிருந்து வரும் போது பாலியல் ரீதியான நடத்தைகளில் ஈடுபடல், தகாத வார்த்தைகளால் பேசுதல் என இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் பலதரப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவற்றிலும் அண்மைக்காலங்களில் குறிப்பாக பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதனைக் காணலாம். ஆசிரியை காதலனால் வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை, அமிலம் ஊற்றப்பட்டு பெண் படுகொலை, கத்தியால் குத்தப்பட்டு பெண் கொலை போன்ற செய்திகள் பத்திரிகை வாயிலாக நாம் அறிந்தவையே. எனவே வன்முறைச் சம்பவங்கள் குறித்து உளவியல் ரீதியான ஓர் பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது.

**வன்முறை என்றால் என்ன?**

1) ஒரு மனிதனுடைய அல்லது குழுக்களினுடைய, அல்லது நிறுவனத்தினுடைய தேவைகள் இதயபூர்வமாக, முழுமையாக நிறைவேற்றப்படாத போது ஏற்படும் விளைவு வன்முறையாகும்.

2) ஒரு மனிதன் பிறந்து வளர்ந்து வருகையில் அவனுக்கு விருப்பமில்லாததைச் செய்து வைப்பது, அவனுக்கு அடிப்படையாக, ஆதாரமாக இருப்பதை இல்லாமற் செய்வது வன்முறையாகும். உதாரணமாக விருப்பமில்லாத ஒருவரைத் திருமணம் செய்து வைத்தல், கல்வி கற்பதற்கான உரிமையை மறுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

3) பலம் கொண்ட ஒருவர் பலவீனமான ஒருவர் மீது அல்லது பலமற்ற ஒருவர்மீது தன் பலத்தினை சட்டத்திற்கு விரோதமாகப் பிரயோகித்தல் வன்முறை ஆகும். இங்கு பலம் என்பது உடல் பலமாகவோ, அதிகாரபலமாகவோ, அரசியல் பலமாகவோ, பொருளாதார பலமாகவோ இருக்கலாம்.

4) ஒருவரின் பூர்த்தி செய்யப்படாத தேவைகளின் வருத்தத்திற்குரிய வெளிப்பாடே வன்முறையாகும்.

5) ஒரு நபருக்கு நோக்கத்துடன் தீங்கு விளைவித்தல், துன்புறுத்தல் வன்முறையாகும். இது குறித்த நபருக்கு உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் வலியை ஏற்படுத்துவதாக அமையும்.

மனிதன் ஒரு சமூகவிலங்கு என்றவகையில் ஏனைய மனிதர்களுடன் தொடர்புகளைப் பேணிக்கொள்ளல் தவிர்க்க முடியாததாகும். இத்தகைய தொடர்புகளால் ஏற்படும் நடத்தைகள் சிலரை மகிழ்விக்கின்றன. சிலரை நோகடிக் கின்றன. நோகடிக்கின்ற நடத்தைகள் வன்முறைகளாகின்றன. ஒரு சமூகம் ஆரோக் கியமாகச் செயற்படுவதற்கும், சமூகமாக அபிவிருத்தியடைவதற்கும் தேவையான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாதபோது வன்முறை உருவாகின்றது.

**வன்முறையின் வகைகள்**

1) சுயவன்முறை

ஒருவர் தன்னைத்தானே வன்முறைக்கு உள்ளாக்குதல் சுயவன்முறை எனப்படும். மற்றவர்களுக்கு எதிராக ஒருவர் வன்முறையில் ஈடுபடுவதற்கெல்லாம் மூல காரணமாக இருப்பது சுயவன்முறையாகும்.

உ-ம்:- மது, போதைப் பொருள் பாவித்தல், தன்னைத்தானே காயப்படுத்தல்

சுயவன்முறை எண்ணம் மேலோங்கும் போது ஒருவர் தன்னைத் தானே தற்கொலை மூலம் அழித்துக் கொள்கிறார்.

2) உடலியல் ரீதியான வன்முறை

ஒருநபரின் உடலில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் வன்முறை இதுவாகும். அடித்தல், உதைத்தல், உடலியல்ரீதியாக சித்திரவதைக்கு உட்படுத்தல், காயப்படுத்தல், நெருப்பினால் சுடுதல், அங்கவீனப்படுத்தல், கொலை செய்தல் போன்றவை இதிலடங்கும்.

3) உளவியல் ரீதியான வன்முறை

ஒருவரை பேசுதல், அவமானப்படுத்தல், ஒருவரைத் தனிமைப்படுத்தி அவரது நடமாடும் சுதந்திரத்தைப் பறித்தல், கட்டுப்படுத்தல் போன்றன உளவியல் ரீதியான வன்முறையாகும்.

4) பாலியல் ரீதியிலான வன்முறை

பாலியல் பலாத்காரம், பாலியல் வல்லுறவு, பாலியல் துர்ப்பிரயோகம், பாலியல் சுரண்டல், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல், பலவந்தப்படுத்தி விபச்சாரத்தில் ஈடுபடுத்தல், பாலியல் படங்களுக்குப் பெண்களைப் பயன்படுத்துதல், பாலுறுப்புக்களைச் சிதைத்தல் போன்றன இதனுள்ளடங்கும்.

5) குடும்பரீதியான வன்முறை

கணவனால் வீட்டு வன்முறைக்கு உள்ளாக்கப்படுதல், இளவயதுத் திருமணத்திற்கு கட்டாயப்படுத்துதல், சீதனம் கேட்டுத் துன்புறுத்தல், பலவந்தப்படுத்தி திருமணம் செய்து வைத்தல் போன்றன குடும்ப ரீதியான வன்முறை ஆகும்.

(தொடரும்.......)



# வாசகர் பார்வை

*2011 ஆண்டின் தை-சித்திரை மாதங்களுக்கான இதழ் என் கரம் இறுகக் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. ஆசிரியர் அருட்பணி.சூ.டேமியனின் அவர்களின் 'உற்சாக ஊற்றைத் திற' அற்புதம்.*

காவலூர்.இ.விஜேந்திரனின் 'இயற்கைக்குத் திரும்பிப் போ' எனும் கட்டுரை சிறப்பாக இருந்தது. படிப்போரை, கட்டாயம் விழிப்படையத் தூண்டும். பொதுவாக உள நலம் சார்ந்த கட்டுரைகள் அத்தனையும் காத்திரமானவை.

முறையற்ற உணவுப் பழக்க வழக்கங்கள்! எல்லாமே இயந்திரமயமான ஒரு சூழல்! இவைக்குள் மனிதன் வாழ்ந்து பழக்கப்பட்டுக் கொண்டான். அதில் இருந்து விடுபடமுடியாத இக்கட்டான நெருக்கடிகள் மனிதனுக்கு சோம்பல் பிடித்த உடற் கலங்கள் மிக இள வயதிலேயே வீரியம் குறைந்து போகின்றன. மனிதன் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி அதில் மீள முடியாமல் குறும் ஆயுளில் முடிந்து போகின்றான். இவை எல்லாவற்றிற்கும் விடை காணும் ஔடதமாக 'சூரிய நமஸ்காரம்' எனும் கட்டுரை சிறப்பாக இருந்தது.

நோயுற்ற உலகத்திற்கு மா.இரத்தினசோதி போன்றோரின் யோகக்கலை பற்றிய அறிவு பரந்தளவில் விரிவாக்கம் பெற வேண்டும். இத்தகைய ஜாம்பவான்களை பாடசாலைகள், அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது காலத்தின் கட்டாய தேவை ஆகும்.

அஞ்சலியின் சேவை நீண்டு, பரந்து செல்ல வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,

'சமரபாகு' - சீ.உதயகுமார்

## பொது அறிவிற்குரிய விடைகளை இணைக்கப்பட்டுள்ள தாளில் எழுதி அனுப்புங்கள்
## (நிழற் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

அஞ்சலியகம்,
நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

Anjali Aham,
Nellandai Road,
Thumpalai,
Point Pedro,

**சுடர் - 01 சஞ்சிகைக்கான விடைகள்**

(1) ஆவணி 2007 (2) ஜப்பான் (3) Face Book
(4) வைகாசி 2வது ஞாயிற்றுக்கிழமை (5) நீலத்திமிங்கிலம்

## சுடர் - 02 சஞ்சிகைக்கான பொது அறிவுப்போட்டி

01) உலக மன்னிப்பு தினம் எது?
02) ஆசிரியாவின் வைரம் என்பது எது?
03) ஒரு குழந்தை ஒரு நாளில் சராசரி எத்தனை தடவைகள் சிரிப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றார்கள்?
04) அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும் அது என்ன?
05) பத்திரிகைகளே வெளிவராத நாடு எது?

**சுடர் 1 சஞ்சிகைக்கான சரியான விடைகளை எழுதிய 09 மாணவர்களில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்பட்ட மாணவி**

**ந.சுவீந்தி**
**C.M.E கல்வி நிலையம்**

## சரியான விடைகளை எழுதிப் பாராட்டினைப் பெறுவோர்:

K.கார்த்திகா C.M.E
M.சுதர்சன் C.M.E
ந.சிவராம் C.M.E
S.பிரிந்தா C.M.E
ந.வசந்தன் C.M.E
நா.விதுபனா - லங்கா மாதா மடம், அச்சுவேலி
தோ.நிதர்சினி - லங்கா மாதா மடம், அச்சுவேலி
இ.பிரணவி - லங்கா மாதா மடம், அச்சுவேலி

## நீங்களும் இணைந்து விட்டீர்களா!

பருத்தித்துறையில் அமைந்துள்ள "அஞ்சலியகம்" என்ற உளவளத்துணை நிலையத்தால் "அஞ்சலி" என்னும் சஞ்சிகை ஒவ்வொரு ஆண்டும் மூன்று சுடர்களாக வெளிவந்து கொண்டு இருக்கின்றது. உள, சமூக, ஆன்மீக, இலக்கிய அம்சங்களைத் தாங்கி வெளிவருகின்றது. எமது சமுதாயத்தில் உள்ள மாணவர்கள், இளைஞர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்களுக்கு ஒரு களமாகவும் அமைகின்றது. சமுதாய முழு மனித வளர்ச்சிக்கு இது பங்காற்றி வருகின்றது. எனவே நீங்களும் இச்சஞ்சிகையைப் பெற்றுப் பயன்பெற ஆக்கங்களை வெளியிட அஞ்சலியை வளர்க்க இன்றே முயலுங்கள். வருட சந்தாவை செலுத்தி அஞ்சலியோடு இணைந்து கொள்ளுங்கள்.

அஞ்சலி உங்கள் இல்லங்களில் தேடி வர, உங்களது பெயரையும், முகவரியையும், தெளிவாக எழுதி, வருட சந்தாவாக ரூபா 120/= ஐ காசுக்கட்டளையாகவோ, (பருத்தித்துறை பிரதான தபாலகத்தில் மாற்றக் கூடியவாறு) அல்லது பணமாகவோ அனுப்பி வைக்கவும்.

தயவு செய்து *30.10.2011* இற்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

**'அஞ்சலி' சஞ்சிகை,**

**நெல்லண்டை வீதி, தும்பளை,**

**பருத்தித்துறை,**

**தொ.பே: 021 3217262**

**அச்சமைப்பு : S.P.M வீ.எம்.றோட், பருத்தித்துறை. T.P: 0774966997**